விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 2 ரபியுல் 15 இதழ் 280

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 18-11-1986

# பொருள்களைப்பாதுகாப்பான இடத்துக்கு எடுத்து செல்லவும்

## வர்த்தகர்களுக்கு புலிகள் எச்சரிக்கை

(நமது நிருபர்)

யாழ். கோட்டை இராணுவ முகாமுக்குச் சமீபமாகவுள்ள வியாபார ஸ்தாபனங்கள், மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், உடனடியாகத் தேவைப்படும் பொருட்களையும் தவிர மேலதிகமாக வைத்திருக்கும் பொருட்களைப் பாதுகாப்பான தூர இடங்களுக்கு எடுத்துச் சென்று வைத்திருக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் நேற்றிரவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து இரண்டொரு தினங்களில் இராணுவத்தினர் வெளிவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனினும் எமது இறுதி மூச்சு உள்ளவரை இராணுவத்தினரை வெளியேறவிடாது

[5ம் பக்கம் பார்க்க]

● பிரதமர் ராஜீவின் அழைப்பையேற்று

# பிரபா விசேஷ விமான மூலம் பெங்களூர் பயணம்

## தள்ளாடி--முருங்கன் ராணுவ ரோந்து

யாழ்ப்பாணம், செவ்

மன்னார் தள்ளாடி முகாமிலிருந்து சுமார் நூற்றுக்கு

[5ம் பக்கம் பார்க்க]

## பாலசிங்கமும், திலகரும் உடன் சென்றனர்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாகத் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குமிடையில் பெங்களூரில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவதற்காக ராஜீவ் ஞாயிற்றுக்கிழமை இரவு விடுத்த அழைப்பொன்றையேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் பெங்களூர் பயணமானார்.

பிரதமர் காந்தி அனுப்பிவைத்த விஷேடவிமானத்தில் திரு பிரபாகரனுடன், அவரது அரசியல் ஆலோசகா டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திலகர் ஆகியோரும் பயணமாகியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்தஒருவர் சென்னையில் இதுபற்றித் தெரிவிக்கையில்; பொலிஸார் இரு தலைவர்களையும் அவசர பேச்சுவார்த்தைகளுக்காக அழைத்துச் சென்றதாகத் தெரிவித்தார்.

இச்சந்திப்பு இனப்பிரச்னைக்கு நல்லதொரு தீர்வு ஏற்படுமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இச்சந்திப்பில் ஒருதிருப்பம் ஏற்படும் என்பது நிறி விடுதலைப்புலிகள் இயக்கப் பேச்

(5ம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர்., ராஜீவ், எம். ஜி. ஆருடன் பிரபாவும்பேச்சுவார்த்தையில்

பெங்களூர், செவ்

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் நோக்கமாக பிரதமர் ராஜீவ் காந்திக்கும், ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பல முன்னேற்றங்கள் காணப்பட்டதாக பெங்களூரிலிருந்து கிடைக்கும் செயதிகள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வே. பிரபாகரன் பிரதமர் ராஜீவினால் விசேட விமானமூலம் பெங்களூருக்கு அழைக்கப்பட்டாரென அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன,

பிரதமர் காந்திக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் இடையில் நடைபெற்ற ச்சையடுத்து இவ்விருவரும் தமிழ்நாடு முதலமைச்சர். எம் ஜி. இராமச்சந்திரனுடனும் பிரபாகரனுடனும் பேச்சு

[5ம் பக்கம் பார்க்க]

## ஈழம் உருவாவதை இந்தியா ஆதரிக்காது

### - போராளிகள் பயங்கரவாதிகளல்ல - ராஜீவ்

பெங்களூர் ,செவ்

"இலங்கையில் ஈழம் என்ற தனிநாடு அமைக்கப்படுவதை இந்தியா ஒருபோதும் ஆதரிக்க மாட்டாது. மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்படுவதையும் ஆதரிக்கமாட்டாது இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை ஜனாதிபதி ஜயவர்த்தனா கடந்த யூன்மாதம் புதுடில்லி வந்தபோது அவரிடம் விளக்கிக் கூறியுள்ளேன்"

இவ்வாறு நேற்று பெங்களூரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாடொன்றில் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

பெங்களூரில் நடைபெற்ற சார்க் உச்சி மகாநாட்டின் பின்பு இப்பத்திரிகையாளர் மகாநாடு பிரதமர் ராஜீவி

(8-ம் பக்கம் பார்க்க)

## 24 படகுகளில் இருந்த திசைகாட்டி கருவிகளை கடற்படையினர் பறித்தனர்

யாழ்ப்பாணம், செவ்

பாலைதீவுக் கரையோரமாயில் நேற்று முன்தினம் பகல் குருநகரைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் 24 படகுகளில் சென்று மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது அங்கு வந்த கடற்படையினர், படகுகளில் இருந்த திசைகாட்டி கருவிகளைப் பறிமுதல் செய்தசம்பவமொன்று நிகழ்ந்துள்ளது

இச்சம்பவம்பற்றி படகின் உரிமையாளர் ஒருவர் தெரிவித்ததாவது!

நேற்றுமுன்தினம் பகல் 10 மணியளவில் பாலைதீவுக்கு அருகாமையிலுள்ள கடலில் குருநகர் பகுதியிலுள்ள 30க்கு அதிகமான படகுகள்மீன்பிடித்துக்

(5ம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசே ★ விடுதலைப்போராட்டத்தை அங்கீகரி ★ கைப்பற்றிய ஆயுதங்களை மீளக்கொடு

# யாழ். நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(அலுவலக நிருபர்)

"இந்திய அரசே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரி! போராளிகளிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை அவர்களிடம் மீளக்கொடு! தஞ்சம் புகுந்திருக்கும் போராளிகளைத் துன்புறுத்தாதே!"

இக்கோரிக்கைகளை முன்வைத்து நேற்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்பட்டது.

தமிழர் கலாசார அவையினால் நடாத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தமிழர் பிரதேச உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் முற்போக்கு எழுத்தாளர்கள், யாழ் பல்கலைக்கழக இந்து மாமன்றம், யாழ் இலக்கிய வட்டம், யாழ் இளங் கலைஞர் மன்றம், பாஷையூர் பொது அமைப்புகள், யாழ் முஸ்லிம் பொது அமைப்புகள், மகளிர் அமைப்புகள், சனசமூக நிலையங்கள், நாவலர்சபை உட்பட பல்வேறு பொது மன்றங்களின் பிரதிநிதிகளுமாக பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

சுலோக அட்டைகளைத் தாங்கிக்கொண்டு யாழ்ப்பாணத்தின் நாலாபக்கங்களிலுமிருந்து அணி அணியாக வந்து கொண்டிருந்த ஊர்வலத்தினர் நேற்றுக் காலை 10 மணிக்கு நல்லூர்

[5ம் பக்கம் பார்க்க]



# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Honda CG 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்பு: 38 பாரதி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம். C 5855

தரமான அரிசி, மாட்டுத்தீன், கோழித்தீன், முட்டை ஆகியவற்றை இங்கே பெற்றுக் கொள்ளுங்கள். யாழ். அரிசிக் களஞ்சியம், ஸ்ரான்லி வீதி (ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக) யாழ்ப்பாணம். (C 5781)

இறக்குமதி செய்யப்பட்ட Honda - C 50, Chaly - 50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. சதாஸ் மோட்டோர்ஸ், 56/2, ஸ்ரான்லிவீதி. [இலங்கை வங்கிக்கருகாமை], யாழ்ப்பாணம். C 5815

ரோசாச் செடிகளுக்கேற்ற விஷேச "ரோசா உரம்" விற்பனைக்குண்டு. M. G M and Stores 781, K. K S Road, and 208 1st Cross St, Jaffna. T. P. 22611. (C 5072)

பழைய ஓடுகள், பனை மரங்கள், தீராந்திகள், நிலைகள், யன்னல்கள் கதவுகளுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு Dr.M. சபாரத்தினம், காங்கேசன்துறைவீதி, கொக்குவில் (கொக்குவில் சந்திக்கருகாமையில்) (C 5824)

Golden Comet சேவற் குஞ்சுகள் 19ந் திகதி புதன் கிழமையும், Bairaha Farms புரோயிலர் குஞ்சுகள் 21ந் திகதி வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியேபதிவு செய்க. சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (C 5828)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதியில் மோட்டர் லயிற் சகல வசதியுடன் கூடிய வீடு மூன்று பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும், முகவரி சி. வன்னியசிங்கம், இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு. (C 5820)

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கஸெட் பிள்ளையார் பெருங்கதையைமுன்னிட்டு (1)விநாயகர் சுப்ரபாதம், விநாயகர் கவசம், விநாயகர் அகவல் (2) புதிய பிள்ளையார் துதிப்பாடல்கள். சீர்காழி, ரி. எம். எஸ். இன்னும் பல. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். C 5843

தெல்லிப்பளையில் அரசினர் வைத்தியசாலைக்கும் புகையிரதநிலையத்திற்கும் மத்தியில் பருத்தித்துறை - மூளாய் பிரதான வீதியிலமைந்த 3 பரப்புக்காணி கிணற்றுப்பங்குடன் விற்பனைக்குண்டு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும், திருமதி பரமானந்தன். பாரிமணியம் வீதி, தெல்லிப்பளை. C 5852

## வகுப்புக்கள்

Radio - TV. வெல்டிங், வயறிங், மோட்டார் வைன்டிங், மோட்டார் மெக்கானிசம், தட்டெழுத்து - சுருக்கெழுத்து 22-11-86ல் ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு: Vispa Engineering Hall 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 5839

## தேவை

தையல் நிலையம் ஒன்றிற்கு பிறசியர் தைப்பதில் அனுபவம் உள்ள பெண்கள் உடன் தேவை சம்பளவிபரம் நேரில் தொடர்பு கொள்ளவும். லுமாலா காமன்ஸ் 39/6 மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை யாழ்ப்பாணம். C 5842

10 000 என்வலப் தேவை. யாழ் நகரில் தரமானஎன்வலப் உற்பத்தி செய்பவர்கள் மாதிரி என்வலப் ஒன்றுடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். யாழ் சைனீஸ்றெஸ்ரோறன்ற் 124, RR நல்லையா வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23460. (C 5854)

## சேவை

உங்களுக்குத் தேவையான பொருட்கள் எவையாஞலும் வாங்கவும் / விற்கவும் தினசரி எம்மிடம் வாருங்கள் லக்கி பெனிபிட் கோ. லிமிட்டட் சந்திக்கருகாமையில், கோப்பாய். (C 5823)

Lamination-உங்கள் படங்களையும் கல்வித் தராதரப் பத்திரங்களையும் பூச்சியில் இருந்தோ அல்லது காலத்திஞல் வரும் அழிவில் இருந்தோ காப்பாற்றி தன்முறை தனிமுறையாகப்பாதுகாக்கபொலியஸ்டர் உறையில் நிரந்தரமாக சீல் செய்து வைக்க, தொடர்பு கொள்ளவேண்டிய இடம், ஞானம்ஸ் ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம். அல்லது பதிநாதன், 118, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். C 5712

கைரேகை, கிரகநிலை, எண் சோதிடம் என்பனவைக் கொண்டு தங்கள் வாழ்வின் உண்மை நிலை கூறப்படும். மணமகன் மணமகள் தேவையானவர்கள்செவ்வாய்க் குற்றமுள்ள சாதகர்களும்) சகல மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம் பிரபல கைரேகை எண்சோதிட நிபுணர், செ. நாகேந்திரராசா 174/16 கோவில் வீதி, நல்லூர். கைலாசபிள்ளையார் கோவிலடி. C 5772

## யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை கூறுவிலைகள்

14-11-86ந் திகதியை முடிவு திகதியாகக் கொண்டு சபைக்குத் தேவைப்படும் படிவங்கள். (1) பதிவேடுகள் அச்சிட்டு வழங்கல். (2) நாராந்தனை ஊர்காவற்துறை ஆகிய உப அலுவலங்களுக்கு தேவையான மின்கம்பங்களை காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்து ஏற்றியிறக்கி விநியோகித்தல், ஆகிய வேலைகளின்முடிவு திகதி பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

1. கேள்விப்பத்திரம் வழங்கல் முடிவுதிகதி 21-11 86 நண்பகல் 12-00 மணி வரை.
2. கேள்விப்பத்திரம் ஏற்றல் முடிவுதிகதி 25-11-86 நண்பகல் 12-00 மணி வரை.

கே இராமநாதன்,
பிரதிச்செயலாளர்,
மாவட்டச் செயலாளருக்காக,
அபிவிருத்திச்சபை அலுவலகம்
செயலகம்,
யாழ்ப்பாணம்.
14-11-86. A 3113

## ஊர்வலம் ரத்து

யாழ்ப்பாணம். சவ். ஈழவர் முன்னணியினரால் இன்று செவ்வாய்க்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம்கைவிடப்பட்டுள்ளதாக ஈழவர் முன்னணிச் செயலாளர் அறிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"சென்னையில் இந்திய அரசிஞல் ஈழவிடுதலைப் போராளிகளை வீட்டுக்காவலில் தடுத்து வைத்திருப்பதற்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாக இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்திருந்தோம். மேற்படி தடைகள் 15ம் திகதி நீக்கப்பட்டு விட்டதஞல் இன்று நடைபெறுவதாகவிருந்தஊர்வலம்கை விடப்பட்டுள்ளது.

## 'அகதிகள்' பத்திரிகை

சாவகச்சேரி, திங்கள்

அறவழிப் போராட்டக் குழுவினர் "அகதிகள்" எனும் பெயரில் இரு மொழி மாதாந்தப் பத்திரிகை ஒன்றினை மிக விரைவில் வெளியிட ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

இன்று தமிழ்ப்பிரதேசத்தில் பெருகி வருகின்ற அகதிகளின் வருகை, அவர்கள் அன்றாடம் நோக்குகின்ற பிரச்னைகள் பற்றியும், மற்றும் அகதிகள் முகாங்களை நடாத்துபவர்கள் மத்தியில் ஒரு நெருங்கிய உறவினைவளர்த்தெடுத்து, தமிழ்ப் பகுதிகளில் அகதிகளாக்கப்பட்டு வருகின்ற மக்ளின் அடிப்படைப் பிரச்னைகள், தேவைகள் பற்றியும் இப்பத்திரிகை முக்கியபணிகளை மேற்கொள்ளும் என அறியமுடிந்தது. [ஊ

## நான்காவது நினைவுதினம்



அமரர்
வே. வன்னியசிங்கம்

அன்னையின் மடியில்; 30-10-1919
ஆண்டவன் மலரடிகளில் 18-11-1982
திதி: 04-12-1986
நினைவு தினம்: 18-11-1986

அன்பும் அமைதியும்
ஒருங்கே அமைந்து
பண்புடனும் பாசத்துடனும்எம்மை அரவணைத்து
இன்முகம் காட்டி இனிமையுடன் உரையாடி
கண்ணியம் கடமை கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து
எண்ணியன எல்லாம்
எண்ணப்படியே முடிக்க
மண்ணகம் விட்டு விண்ணகம் சென்றிட்ட
எம் உயிரே! எம் குடும்ப தலைவா!
ஆண்டுகள் நான்கென்ன
நாற்பதுதான் சென்றாலும்
என்றுமே மறவோம்
இனிமையான உம் நினைவை
நின்னரிய ஆசிகளுடன்
தொடர்வோம் உமதுவழி

மனைவி, மக்கள், மருமக்கள் பேரர்.
ஸ்ரீ நிலையம்,
குரும்பசிட்டி. C 5856

# Gana's Institute
## Nallur
## A/L 87, 88 New Batch

PHYSICS- Mr பணியம். Mr. விக்கி
CHEMISTRY-Mr செல்வா. BOTANY- Mrs Bala
ZOOLOGY- Mr இளங்கோவன்.
APP and PURE- Mr சுந்தரக்குமார்;
விசேட பயிற்சி ஆங்கில வகுப்பு- Mr. பஞ்சாட்சரம்
வகுப்புக்கள் ஆரம்பம்!
19-11-86 3-30 p.m

விபரங்கட்கு: 499, பருத்தித்துறை வீதி. நல்லூர்.
(கோயில் முன்பாக)
(A 2884)

# Computer Programming
## BASIC LANGUAGE

ஆரம்பம்:- சனி, ஞாயிறு வகுப்புக்கள்
22-11-86 (3 மாதங்கள்)

ஒவ்வொரு மாணவர்க்கும் சிறந்த
கம்பியூட்டர் பயிற்சி அளிக்கப்படும்;

மொத்தக்கட்டணம் 750/-மட்டும்.
சேரும்போது செலுத்தவேண்டியது 500/மட்டும்.

# Unikco Computer Centre
மானிப்பாய்.

[C-5853]

## சிங்கப்பூரில் பணிப்பெண்களுக்கான
# வேலை வாய்ப்பு

- ✶ ஆங்கிலம் பேசக்கூடியவர்கள்.
- ✶ தமிழ்/மலே மொழிகள் பேசக்கூடியவர்கள்.

வயது 22 தொடக்கம் 35 வரை

1. இரண்டு 'போஸ்காட்' அளவான கலர் புகைப் படம்.
2. 10 'பாஸ்போர்ட்' அளவிலான கறுப்பு/வெள்ளை புகைப்படங்களுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:-

# Royal Agency (Pte) Ltd,
158, New Chetty Street,
Colombo - 13.

APPROVAL REF. AL/470/11/86. (A-2882)

# சோஷலிசத்தை விஞ்ஞானமாக கற்றல்

கார்ல் மார்க்ஸும் பிரெடரிக் ஏங்கல்ஸும் மனித சமுதாயத்தை விஞ்ஞான ஆய்வுக்கான ஒன்றாக அணுகினர். இது அவர்கள் விஞ்ஞான சோஷலிசத்தை விரிவுபடுத்த உதவியது விஞ்ஞான சோஷலிசம் மனித இன வரலாற்றின் அர்த்தத்தையும், உத்தேசத்தையும் சரியாக விளக்கியது இத்தத்துவம், முதலாளித்துவத்தை அகற்றி அவ்விடத்தில் அமரப்போகும் புதியதொரு சோஷலிச அமைப்பு உதயமாவதன் தவிர்க்கமுடியாமையை நிரூபித்தது. விளடிமிர் லெனிஞல் விருத்தி செய்யபபட்டு, ரஷ்யாவல் வெற்றிகரமாகக் கடைப்பிடிக்கப்பட்ட இக்கொள்கை தான், உலகின் முதலாவது தொழிலாளர், விவசாயிகள் அரசின் ஸ்தாபிதத்துக்கு இட்டுச் சென்றது.

சோஷலிஸ்டுகள் இடைவிடாது இத்தத்துவத்தைக் கற்பது அவர்கள் கடமையாகும் என்று ஏங்கல்ஸ் கருதிஞர். சோஷலிஸம் விஞ்ஞானமாகிவிட்டபடியால் அதை மற்ற விஞ்ஞானங்ள் போல் தொடர்ந்து கற்றல் வேண்டும் என்றும் அவர் எழுதிஞர்.

விஞ்ஞான சோஷலிசத்தைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற நம்நாட்டின் சோஷலிச இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும் சட்டத்தரணியுமாகிய த. துரைசிங்கம் எழுதிய "லெனினும ஆசியாவும்" என்ற நூலைப் படியுங்கள்.

இந்நூலின் தமிழ், சிங்கள, ஆங்கிலப் பதிப்புக்கள் புத்தகசாலைகளில் கிடைக்கும்.

விலை ரூபா 10/-.

## சோஷலிச ஆய்வுக்கழகம்,
31, வில்சன் வீதி, கொழும்பு - 12.

(A-3114)

# இஸ்ரேல் யுத்த விமானங்கள் பாலஸ்தீனிய தளம்மீது தாக்குதல்

பெய்ரூட், நவம்பர் 17

இஸ்ரேலிய யுத்தவிமானங்கள் நேற்று தெற்கு லெபனானிலுள்ள பாலஸ்தீனிய தளங்கள்மீது பலத்த தாக்குதல்களை நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த விமானத் தாக்குதலை எதிர்த்து பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் விமானஎதிர்ப்பு பீரங்கியால் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலினால் இஸ்ரேல் யுத்த விமானங்களுக்கு சேதமேற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சேதவிபரம் பற்றி எதுவும் உடனடியாக அறிவிக்கப்படவில்லை. (ஒ)

## உலகச் செய்திகள்

இந்ததாக்குதலினால் உயிர்ச்சேதமெதுவும் நிகழவில்லை. மூன்று பாலஸ்தீனியர்கள் மட்டும் காயமடைந்தனர்.

கடந்த ஒரு மாதத்திற்குபின்னர் முதன் முதலாக இஸ்ரேல் மேற்கொண்ட இந்த விமானத் தாக்குதலில் ஆறு யுத்த விமானங்கள் குண்டுகளைப் பொழிந்ததாக பாலஸ்தீனிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கெய்ரோவில்

## தடுத்துவைக்கப்பட்ட தமிழர்கள் டென்மார்க் செல்வார்கள்

கெய்ரோ, நவம்பர் 17

கெய்ரோ விமானநிலையத்தில் சுமார் ஒரு வாரகாலமாக தடுத்துவைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் இன்று டென்மார்க் புறப்பட்டுச் செல்வார்கள்.

அரசியல் புகலிடம் கோரி இவர்கள் சமர்ப்பித்துள்ள விண்ணப்பங்கள் குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும்வரை டென்மார்கில் இவர்கள் தங்கியிருப்பார்கள்.

இவர்களை இலங்கைக்கு அல்லது சிங்கப்பூருக்கு விமானத்தில் அனுப்பிவைப்பதென தீர்மானித்திருந்தபோதும் அது இறுதியில் கைவிடப்பட்டது.

இலங்கைக்கோ சிங்கப்பூருக்கோ செல்வதற்கு இவர்கள் மறுப்புத் தெரிவித்ததினாலே இத் தீர்மானம் கைவிடப்பட்டதாக தெரியவருகிறது. (ஒ)

## லண்டன் சம்பவம் 6 தமிழர் கைது

லண்டன், நவம்பர் 17

லண்டனின் ஈஸ்காம் என்ற இடத்தில் இடம்பெற்ற பெற்றோல் குண்டுவீச்சுச் சம்பவம் தொடர்பாகவிசாரணை நடத்திவரும் பொலிஸார் ஆறு தமிழர்களை கைதுசெய்துள்ளார்கள்.

இந்தச் சம்பவத்தோடு தொடர்புடைய சிலர் இன்னமும் தேடப்பட்டுவருகிறார்கள் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ)

## தடுப்புக்காவல்

சென்னை, நவ 16

ஈழப் புரட்சி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. பி. கே. பாலசுப்பிரமணியம் சென்னையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவருடன் வேறு இருவரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், செவ்

பகவான்ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 61வது ஜெயந்தி தினத்தையொட்டிய விழா எதிர்வரும்30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு திருநெல்வேலி ஸ்ரீ சத்திய சாயி சமித்திய மண்டபத்தில் நடைபெறும்.

இவ் விழாவில் 'பாபாவின் வாழ்க்கையும் போதனையும் என்ற தலைப்பில் ஏ. நடராஜா உரையாற்றுவார்.

விஞ்ஞானியின் கண்ணோட்டம் என்ற தலைப்பில் டாக்டர் எஸ் வாமதேவன் உரையாற்றுவார். விழாவில் மனித மேம்பாட்டுக் கல்வி அறிமுகப் பொருட்காட்சியும் இடம்பெறும். (ஒள)

பிறேஸில் பொதுத்தேர்தல்:

## ஆளும்ஜனநாயக இயக்ககட்சி முன்னணியில் நிற்கிறது

லண்டன், நவம்பர் 17

பிறேஸிலில் நேற்று நடைபெற்ற பொதுத்தேர்தலில் மூன்று சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் ஆளும் ஜனநாயக இயக்ககட்சி அமோக வெற்றியீட்டக்கூடும் என்று தெரியவருகிறது

கடும்போட்டி நிலவிய இரு மாநிலங்களில் எதிர்கட்சிவேட்பாளர்களைவிட ஆளும்கட்சி வேட்பாளர்கள் இரு மடங்குக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

பிறேஸிலில் 85ம் ஆண்டு மார்ச்மாதம் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டதன்பின்னர் முதல் தடவையாக இந்த பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. (ஒ)

போராளிகள் மீதான

## இந்திய அரசின்நடவடிக்கையை கண்டித்து உண்ணாவிரதம்

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே பிரபாகரனையும், ஏனைய போராளிகளையும் விடுவிக்கவேண்டுமென்றும், கைப்பற்றிய ஆயுதங்களை மீண்டும் கையளிக்க வேண்டுமென்றும் கோரி சுதுமலை அம்மன் கோவில், நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயம் ஆகிய இடங்களில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

ஆனைக்கோட்டை மக்களால் நடத்தப்பட்ட பல நூற்றுக் கணக்கானவர்கள், பங்குபற்றிய உண்ணாவிரதம் மூத்தநயினார் கோவிலடியில் இடம்பெற்றதுடன் இந்திய மத்திய அரசின் இவ்வனைத்துப்போக்குகளையும்கண்டித்து பலர்கருத்து வழங்குனர்கள்.

சுதுமலை அம்மன் கோவில், நவாலி சென் பீட்டர்ஸ்தேவாலயம் ஆகிய இடங்களிலும் இந்திய மத்திய அரசின் போக்கைக் கண்டித்து உண்ணாவிரதம் நடைபெற்றது.

ஏனைய பகுதிகளிலும் அனைத்து மக்களாலும் ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், அடையாள வேலைநிறுத்தங்கள் விஸ்தரிக்கப்படுகின்றன.

மானிப்பாய் அனைத்துகிராமங்களிலும் அரச, கூட்டுறவு ஊழியர்கள் முற்றாக வேலை நிறுத்தம், அடையாள வேலை நிறுத்தம் என்பவற்றில் ஈடுபட்டுள்ளதுடன் அனைத்து வர்த்தகர்கள் தொழிலாளர்கள் தமது ஸ்தாபனங்களை மூடியும் தமது எதிர்ப்டைக் காட்டியதுடன் அனைத்து மாணவர்களும் தமது கல்விக்கூடங்களைப் பகிஷ்கரித்து தம் எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

### வட்டுக்கோட்டையில்

போராளிகள் தொடர்பான இந்திய அரசின் நடவடிக்கைகளைக்கண்டித்து வட்டுக்கோட்டைப்பகுதியில் வாழும் மக்களை உள்ளடக்கிய ஊர்வலம் ஒன்றும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சித்தன்கேணியைமையமாக வைத்து அரால் வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த மக்களின் இந்த ஆட்சேப ஊர்வலம் சித்தன்கேணியிலிருந்து புறப்பட்டு சங்கானை சண்டிலிப்பாய் ஊடாகமானிப்பாய் அந்தோனியார் கோவிலைச் சென்றடைந்தது.

காலை 9 மணிக்கு ஆரம்பமான இவ்வூர்வலம் பிற்கல் ஒரு மணிக்கு குறிப்பிட்ட இலக்கைச் சென்றடைந்தது. சுமார் ஐயாயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டு சுலோகஅட்டைகள் தாங்கிய வண்ணம் கோஷமிட்டுச்சென்றனர்.

மானிப்பாய் அந்தோனியார் கோவிலில் வ கிருஷ்ணசாமி தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. (மா-கே)

சோவியத் தலைவரின்

## இந்திய விஜயம் இரு நாட்டு உறவைப் பலப்படுத்தும்

புதுடில்லி, நவ: 17

இந்தியாவிற்கு சோவியத் தலைவர் திரு. மிகைல் கொர்பசேவ் மேற்கொள்ளவிருக்கும் பயணம் இந்திய சோவியத் உறவுகளை வலுப்படுத்தவும் உலக அமைதிக்கு உறுதியளிக்கும் வகையிலும் அமைந்திருக்குமென்றும் சோவியத் யூனியனுக்கான இந்தியத் தூதுவர் திரு. டி. என். கௌல் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கும் திரு. கொர்பசேவுக்குமிடையே சொந்தமுறையில் சுமுகநிலை நிலவுவதால் இந்திய சோவியத் நட்புறவு மேலும் வலுப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ)

## அகதிகளுக்கென சேகரித்த பணமும், துணியும் எங்கே?

### கிராமிய நீதிமன்றத்தில் வழக்கு

வல்வெட்டித்துறை, திங்

அகதிகளுக்காகச் சேகரிக்கப்பட்ட ரூபா 28,000 பணத்தையும் அகதிகளுக்காகச் சேகரிக்கப்பட்ட உடுதுணிகளையும் அகதிகளுக்கு வழங்காமல் தலைமறைவாகியுள்ளவர் மீது கிராம நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது

கடந்த காலங்களில் அரச படையினரின் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உதவும் வகையில், வல்வைபகுதி கழகங்களினால் சேகரிக்கப்பட்ட பணம் ரூபா 28,000 வல்வை சன சமூக சேவா நிலையத்தால் விநியோகிக்க முடிவு செய்து அப்போதை நிர்வாகக் குழு செயலாளரான சிவஜிலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் இப்பகுதியில் மக்கள் இடம் பெயர்வு காரணமாகவும், ஊரில் ஏற்பட்டிருந்த பதட்ட நிலையினாலும் அவ்உதவித் தொகை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படாமலேயே இருந்தது.

அத்தொகைப் பணம் மறு நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்ட பின்னும் அவர்களிடம் ஒப்படைக்கப்படாமலேயே, அச்செயலாளர் வல்வையில் இல்லாமல் தலைமறைவாகிவிட்டாராம்.

சம்பந்தப்பட்ட கழக உறுப்பினர்கள் அன்றைய செயலாளர் மீதும் நிர்வாக உறுப்பினர்கள் மீதும் பணத்தை ஒப்படைக்கும்படி கோரிகிராம நீதி மன்றில் வழங்கு ஒன்றை தாக்கல் செய்ய உள்ளனர்.

## அஞ்சலி

யாழ்ப்பாணம். செவ்

சங்கானை மேற்கு சனசமூக நிலைய முன்னாள் தலைவரான ஆ. கருணாகரனும் அவரது சகோதரருமான ஞானகரனும் லண்டனில் பெற்றோல் குண்டுவீச்சுச் சம்பவத்திற்குப் பலியானமைக்கு மேற்படி சனசமூக நிலைய அங்கத்தவர்கள் தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் செலுத்தியுள்ளனர்.


## விவசாயிகளே!

உங்கள் நெல்வயல்களில் மடிச்சுக்கட்டியின் தாக்கம் அதிகமாக காணப்படுவதனுல்

லெபேசிட் ஈ சி 50%

(பென்தியோன்)

| | |
|---|---|
| விலை: 100 மி.லீ. | ரூ. 35/- |
| 200 மி.லீ. | ரூ. 65/- |
| 450 மி.லீ. | ரூ. 115/- |

பாவித்து முழுமையான கட்டுப்பாட்டை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை

BAYER

ஹேகெம் லிமிட்டெட்,

400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

இது ஒரு மேற்கு ஜேர்மன் தயாரிப்பு

[A 2865]

**மணிவாக்கு**

அளவு கடந்த கண்டிப்பு ஒழுங்கை நிலைநாட்ட உதவாது. அதற்கு முழுமாறாக குண்டுக்கு வழிவகுக்கும்.

—ஜோன் மோர்லே

# நமது நோக்கு

## யாழ். பெரியாஸ்பத்திரி புனரமைப்பு

பத்திரிகைகளை மிக நுணுக்கமாகப் படிக்கும் அவசியம் இன்று அதிகரித்து வருகிறது துருப்பை எடுத்துத் தூணாக்கும் முயற்சி தோல்வியடைகின்றது! ஆனால் தூணையெடுத்துத் துரும்பாக்கும் பயிற்சி நுட்பமாயிருந்தால் வாசகர்கள் ஏமாந்துவிடுகின்றனர்.

வடக்கில் தீவிரவாதிகள் கையிலிருந்து மூன்று பகுதிகள் ராணுவத்தினரால் மீண்டும் கைப்பற்றப்பட்டதாக ஒரு செய்தி; இது விசித்திரமானது இவற்றை ராணுவம் முதல் கைப்பற்றியது எப்போது? பின்னர் இழந்ததும் நாம் கேள்விப்படாத புதிர்கள். எனவே மீண்டும் கைப்பற்றிய 'வெற்றி' வரவில் இடம் பெறுது.

பாதுகாப்பு அமைச்சில் நடக்கும் சமையல் இன்று இத்தகையதே. நீண்டகாலமாக நேரடிப்போரில் எந்தவித வெற்றியையும் காண முடியாத இலங்கை இராணுவம், இன்று நந்திமலையல் தங்களுக்கு விமோசனம் கிடைக்குமோவென்று பரக்க முளிக்குது.

எந்தப்போரிலும் உண்மையே முதலில் பலியாகின்றது. ஆனால் பொய் சொல்லும் திறமைக்கு ஞாபக சக்தி இன்றியமையாதது. பெங்களூருக்கு, இந்திய அரசு அழைப்பு விடுத்தும், அங்கு செல்லாதிருக்கும் பாதுகாப்பு அமைச்சர். இந்த அபாய கட்டத்தில் இத்தகைய பிரசாரத்தை நிறுத்துவது கடினம்.

'பச்சைப்பொய்' என்பதை ஆங்கிலத்தில் 'all bunkum men!' என்பது ஆங்கிலம் புரியாதவர்களுக்கே தெரிந்தபரிபாஷை!

நாம் மேலே குறிப்பிட்ட செய்திபற்றி இன்னொரு கற்பனை யாவரும் ரசிக்கத்தக்கது.

''புதனன்று நாம் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு ஆகிய பகுதிகளிலிருந்த பயங்கரவாதிகளின் பங்கர்களை (தடை அரண்களை) முழுமையாக நாசமாக்கினோம். அப்பொழுது பயங்கரவாதிகள் வாக்கிடோக்கியில் பேசிக் கொண்டதைச் செவிமடுத்தோம். சமாதானத்தை அவர்களும் நாடுவதாக அது மூலம் அறியமுடிந்தது'' இவ்வாறு அமைச்சர் அத்துலத்முதலி பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார் என்று பத்திரிகை கூறுகிறது.

''மட்டுநகரிலும் பொது மக்கள் இலங்கை ராணுவத்துடன் நெருங்கிப்பழகுகின்றனர். இது தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவருக்கு ஆத்திரமளிக்கிறது'' இவ்விரண்டும் தமிழர் போராட்டம் தண்ணீர் கண்டுவிட்டதென்ற கருத்தைப் பரப்ப உபயோகப்படுகின்றன.

இனப்பிரச்னைக்குத் தீர்வு காண மகாத்மா தங்கியிருந்த நந்திமலை உதவவேண்டுமென்று இலங்கை ஜனாதிபதி அங்குதவமிருக்க, இங்கு போர் வெற்றியை நாடுகிறதென்ற பிரசாரம் யாரை ஏமாற்றமுடியும்?

நீண்டகாலம் தோல்வியைத் தழுவிநிற்கும் அரசு, நேரடிப் போரில் வெற்றி காணாதபோதும் பிரசாரத்தால் வெற்றிக்கனவு காண்பது இயற்கை

அஹிம்சையில் நம்பிக்கை கொண்ட ஜனாதிபதி ஜெயவர்த்தன பங்களூரில் இங்கு கொலையாகும் பொது மக்கள் பற்றி பெரும் கவலை தெரிவித்திருக்கிறார். ஏன் வடக்கில் கிழக்கில் எப்பகுதிக்கும் வந்திருந்தால் இந்தியாவின் அசோக மன்னனைப்போல் எவ்வித போரும் இந்நாட்டில் இடம் பெறலாகாதென்று தம்முடைய பெரும்பான்மை வாக்கினால் அரசியல் சாசனத்தை மாற்றியிருப்பார்.

அப்பாவி மக்கள் என்று அவர் குறிப்பிடுவது இலங்கை ராணுவத்தில் சேரும் பச்சிளம் பாலகர்களையுமெனலாம். இதற்கு ஆதாரமாக ஒரு குட்டிக்கதையை ஒரு ஆங்கில தினசரி குறிப்பிடுகிறது.

சென்ற வெள்ளிக்கிழமை பிரசுரத்தில் ஐலண்ட் பத்திரிகை இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது

வடபகுதிக்கு தொண்டர் சேவை அவசியம். தேசபக்தியுள்ளவர்கள் சேர வாருங்கள் என்ற அழைப்பு ஏற்படுத்திய சாதனை இது. ஆள்சேர்ப்பு நிலையத்துக்கு அதிகாரி வந்ததும், ஒரு சார்ஜன்ட் ஓடிவந்து, ''ஐயா பெருந்திரளாகத் தொண்டர் கூடியிருக்கின்றனர். அவர்களுக்குப் பின்னால் சில ராணுவத்தினர் நிற்கின்றனர்'' என்றார். படையினருக்கு அங்கு என்ன அலுவல்? என்று கேட்ட அதிகாரிக்கு, ''தொண்டர்களை தள்ளிக்கொண்டுவந்திருக்கின்றனர்'' என்று சார்ஜன்ட் பதிலளித்தார்.

மாகாணசபைக்கே எதிர்ப்பிருக்கும் தென்னிலங்கைக்கு போரில் வெற்றி என்ற பிரசாரம் எவ்வகையிலும் தேவை.

இவ்வித பிரசாரத்தால், தமிழ் இளைஞர் ஆரம்பித்து தொடர்ந்து நடத்தும் ஆயுதப்போராட்டம் பிசுபிசுத்துப்போகுமோ என்ற சந்தேகம் எழுவது இயல்பு. அதற்கு ஆதரவான பேயாட்டங்களுக்கும் இங்கு குறைவில்லை.

இந்தப் பின்னணியில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இடம்பெறும் பாதுகாப்பு நடவடிக்கைகள், நோயாளிகளுக்கு விமோசனமில்லையா என்ற பீதியை ஏற்படுத்துவது மடமை

எங்கள் நேற்றைய பிரசுரத்தில் குறிப்பிட்டிருப்பதைப்போல தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுக்கே இன்னொரு இருதயமாக இயங்கும் யாழ். பெரியாஸ்பத்திரி என்றும் அழியாத சொத்து.

சண்டை வரும் போகும், டாக்டர்கள், ஊழியர்கள் வருவார்கள். போவார்கள், ஆனால் புலவர் டெனிசர் பிரபு குறிப்பிட்டது போல யாழ் பெரியாஸ்பத்திரி என்றும் போய்க் கொண்டிருக்கும்.

இதனை உறுதிப்படுத்தும் பேர்வழி நான்கு லட்சம் ரூபாய் அத்தியாவசிய மருந்துவகை உடனடியாக உதவக் கட்டளையிட்ட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி.

---

### தாய்மொழி மூலமான சட்டம் வருமுன்

# தமிழில் வைத்திய நூலை வெளியிட்டவர்

## பேராசிரியர் அ. சின்னத்தம்பிபற்றி துணைவேந்தர் வித்தி

> கொழும்பு தமிழ்ச் சங்கத்தினரால் சங்கத் தலைவர் திரு ரி. தர்மராசாவின் தலைமையில் நடாத்தப்பட்ட மகப்பேற்று மாதர் நோய் மருத்துவத்துறைப் பேராசிரியர் வைத்திய கலாநிதி அப்பாக்குட்டி சின்னத்தம்பி நினைவுதின விழாவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் ஆற்றிய நினைவு தினப் பேருரையில் இருந்து சில பகுதிகள்:
>
> ★ பேராசிரியர் நினைவுக் கட்டுரைத்தொகுதி நூலாக வெளிவரவேண்டும்.
>
> ★ பேராசிரியர் ஞாபகமாக யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் மகப்பேற்று மாதர் நோய் மருத்துவத்துறையில் புலமைப்பரிசில் வழங்கவேண்டும்.

கடந்த 36 ஆண்டு காலமாக என்னுடன் நெருங்கியதொடர்பு கொண்டவரும் என்னுடைய நன்மதிப்பைப் பெற்றவருமாகிய பேராசிரியர் பற்றிய நினைவுகளை, இங்கு எடுத்துரைபதற்கு எனக்கு உரிமையுண்டு என்பதனை கூறவிரும்புகின்றேன். மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் தகப்பனார் நாகமுத்து சின்னத்தம்பி அப்பாக்குட்டி என்பவர். தாயார் தெய்வானைப்பிள்ளை ஆவார். இவருக்கு வயது இரண்டாக இருந்தபொழுது தகப்பனாரை இழந்துவிட்டார் தயின் அரவணைப்பிலேயே இவரின் வாழ்க்கை அமைந்தது தாயாரின் தெய்வபக்தியும் சேவை மனப்பான்மையும் பணிவும் அடக்கமும் இவரிடமும் காணப்பட்டது இவர் சிறுவயதிலிருந்தே மருத்துவத் துறையில் ஈடுபடவேண்டும் என தாயார் வற்புறுத்தி வந்தார் தமது மூதாதையர் லோகநாதபிள்ளை தாமோதர பிள்ளை (1830-1905) பிறந்த ஊரைவிட்டுக் கண்டி சென்று அங்கு பெரிய சித்த வைத்தியராகத் தொழில்செய்து வந்ததுடன் பல சமூகத் தொண்டுகளில் ஈடுபட்டு பலரின் அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்தார். கடைசிக் காலத்தில் அவர் சொந்த ஊராகிய மானிப்பாய்க்குத் திரும்பிவந்து தனது சகோதரி முறையான முதலித்தம்பி மகள் பார்வதிப்பிள்ளையுடன் வாழ்ந்து மருத்துவத் தொழிலும் செய்து வந்தார். அவரைப்போல நீயும் ஒரு பிரபல வைத்தியராய் வர வேண்டும். ஊரில் நோயால் வாடும் மக்கள் கொஞ்சநஞ்சமல்ல, காசு உழைப்பதுமாத்திரம் பெரிதன்று. சேவை மனப்பான்மையாய் இரு எனும் தாயாரின் கட்டளை கடைசிவரை பேராசிரியரின் மனதை விட்டகலவில்லை, வாழ்க்கையின் பிற்பகுதியிலே உயர்திரு விபுலானந்த அடிகள் துறவி பூணுவதற்கு முன் தலைமை ஆசிரியராகவிருந்த மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே இவரது ஆரம்பக் கல்வி தொடங்கி அங்கு பயிற்சி முடிந்ததும் அங்கிருந்து சிரேஷ்ட ஆளுனர் புலமைப் பரிசில பெற்று. கொழும்பு றோயல் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். அங்கிருந்து இலங்கை மருத்துவக் கல்லூரியிற் சேர்ந்த அவர் 1935ம் ஆண்டு L M. S. தேர்வில் முதலாம் வகுப்பிலே தேறிச் சிறப்புப் பட்டம் பெற்று சில காலம் ஈழத்தின் பல இடங்களிலும் மருத்துவத்துறையில் சிறந்து விளங்கினார். 1946ம் ஆண்டின் பட்டப் பின்படிப்பின் பொருட்டு இங்கிலாந்துசென்று அங்கு F. R. C S [Edin]. F. R. C. S. [Eng]. M, R. C. og [gr. Bri] ஆகிய தகைமைகளைப் பெற்று 1949ல் நாடு திரும்பினார். இத்தகைய தகைமைகளுடன் நாடு திரும்பிய இரண்டாவது இலங்கையர் இவரே. இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் எஸ். ஆர் நிக்லஸ் ஆட்டிகல அவர்களே இத்தகைமைகளைப் பெற்ற முதலாம் இலங்கையராவார். ஐக்கிய ராஜ்ஜத்திலிருந்து நாடு திரும்பிய பின்னர் கொழும்பு மாதர் நோய் மருத்துவராக நியமிக்கப்பட்டார். 1954ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழக மகப்பேற்று மாதர் நோய் மருத்துவத்துறை இணைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1965ல் இரண்டாவது மருத்துவ பீடத்தின் சிகிச்சைத் துறை பேராதனையில் நிறுவப்பட்டபொழுது மகப்பேற்று மாதர்நோய் மருத்துவத்துறையின் முதலாம் பேராசிரியராக நிரமிக்கப்பட்டார். 1967ம் ஆண்டு 56ம் வயதில் தொடர்ந்து பேராசிரியராக கடமையாற்ற விரும்பாது ஓய்வு பெற்றார்.

### நிபுணர்களை உருவாக்கினர்

கொழும்பிலும் பேராதனையிலும் இவரிடம் கற்றவர்களே பெயர் பெற்ற மருத்துவர்களாக ஈழத்திலும் உலகின் பல பாகங்களிலும் சிறந்த மருத்துவ நிபுணர்களாக கடமையாற்றுகிறார்கள் மகப்பேற்று மருத்துவ நிபுணராக இவர் விளங்கிய காலத்திலே சுகமாகப் பிரசவமெடுப்பதற்குப் பல தமிழ் சிங்கள முஸ்லீம் கர்ப்பவதிகள் இவரிடம் சிகிச்சைக்குச் சென்றனர். பல்லாண்டு மகப் பேறு இன்றி வந்தவர்கள் இவரது ஆலோசனைகளைப் பெற்று மகப்பேற்றை அடைந்தது நானறிவேன். அறுவைச் சிகிச்சையில் இவருக்கு நிகராக வேறொரு மகப்பேற்று மருத்துவரும் இல்லையென்று கூறலாம். 1982ம் ஆண்டுக்குப் பின் தளர்சியுற்றிருந்த போதும் கை நடுக்கம் இருந்தாலும் சிகிச்சைக்குரிய கருவிகளைக் கையிலெடுத்ததும் நடுக்கமற்ற அறுவைச் சிகிச்சையினை செய்வதைப் பலர் கவனித்து வியப்படைந்திருக்கின்றனர். அறுவைச் சிகிச்சை மட்டுமல்ல, மற்றும் சிக்கலான மகப்பேறுகளையும் அவர் வெற்றியுடன் செய்து முடித்தார்.

### தமிழில் நூல் வெளியிட்டார்

மருத்துவத் துறையிலே தமிழிலே தாமாக எழுதியும் மொழிபெயர்த்தும் நூல்களை வெளியிட்டார். பல்கலைக்கழகங்களின் போதனா மொழி தேசிய மொழிகளாக அமைய வேண்டுமென்று சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர், கொழும்புப் பிரசவ பெரிய வைத்தியசாலையிற் கடமையாற்றும்போது 1949ல் 'அயனந்த தேச நோய் நூல்' (Tropical Medicine) என்ற நூலை வெளியிட்டுத் தனது அன்னைக்கு அர்ப்பணித்தார்.

''அயனந்த தேச நோய் நூல்'' ஈழத்திலுள்ள மக்களுக்கும் அவர்களுக்கு அறிவூட்டுவதற்காகவும் நோயற்று வாழ்வதற்கு துணையாகவும் நியமிக்கப்பட்ட வைத்திய சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் முறையே நோய்களைப் பற்றிய அறிவு பெறுவதற்கும். நோயைப் பற்றிய அறிவைத் தமிழிலே மக்களுக்குப் புகட்டுவதற்கும் துணையாகுமென்ற நோக்குடன் இந்நூல் இயற்றப்பட்டது. அவர் தமது முகவுரையிற் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''தமிழர்கள், இந்தியா, ஆபிரிக்கா புறுமா மலாயா, பீஜி முதலிய தேசங்களில் வசிக்கின்றனர். இலங்கையில் யுத்தத்தின் நிமித்தம் பல கூட்டத்தினர் வசித்ததின் காரணத்தினால் புதுப்புது நோய்கள் தோன்றக் கூடும். போக்குவரவு வசதிகள் அதிகரித்தபடியால் புற தேசங்களிலிருந்து புது நோய்கள் வரக்கூடுமென்று இச்சிறு நூலில் முக்கியமாக இலங்கையிலும், இந்தியாவிலும் காணப்படும் நோய்கள் விபரிக்கப்பட்டுள்ளன.''

இந்நூல் பற்றிக் குறிப்பிடவேண்டியதொன்றுண்டு தாய் மொழி மூலம் எல்லா த்துறைகளையும் சார்ந்த கல்வி புகட்ட வேண்டுமென்ற சட்டம் வருவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே, 1949 ஆண்டில், அவர் வைத்திய நூலொன்றினைத் தமிழில் எழுதி அச்சிட்டிருக்கின்றார். தமிழ் புறக்கணிக்கப்பட்ட அக்காலத்தில் அவர் வெளியிட்ட 'அயனந்த தேச நோய் நூல்' என்ற பெயருடைய இந்நூல் அவரின் தீர்க்க தரிசனத்திற்கும் மனித அபிமானத்திற்கும் போதிய சான்றாகும்.

### தாய் மொழிக் கல்வியை செயலில் சாதித்தார்

தாய் மொழி மூலம் சகல துறைகளிலும் உயர்தரக்கல்வி புகட்டப்பட வேண்டுமென்ற அரசியற் சட்டம் அமுலுக்கு வந்தபோது சில பேராசிரியர் மருத்துவத்துறையில் இதனை ஆதரித்தனர்.

ஆனால் அவர்கள் இத்துறையில் செயற்படவில்லை. பேராசிரியர் சின்னத்தம்பி அவர்

(7ம் பக்கம் பார்க்க)

# அரையாண்டு நினைவஞ்சலி



இராமலிங்கம்
விஜயகுமாரன்
அன்னை மடியில்:
1966-03-25
அரக்கர் பிடியில்:
1986-06-18

தாயக விடிவிற்காய்
வீர இலட்சிய தாகங்
கொண்டு
புரட்சிப் பயணம்தொடர்
ந்தாய்
முற்றாத பயணமாய்
இனவாத அரசின் கூலிப்
படையினரால்
மண்ணுள்மண்ணில்மரணித்
தாய்
நீ சிந்திய செங்குருதி
புரட்சிப் பயிர்களுக்கு
உரமாய்
அமையட்டும்; உன் நினை
வுகள் என்றும் எம்
நெஞ்சை விட்டகலாது.
தந்தை, தாய் சகோதர,
சகோதரிகள்.
7ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

C 5862

# 31-வது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
நாகரட்ணம்
சின்னத்துரை

19-10-86 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி நாகரட்ணம் சின்னத்துரை அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய வைபவம் 18-11-86 [இன்று] செவ்வாய்க்கிழமை பகல் எமது இல்லத்தில் நடைபெறும். இவ் வைபவங்களில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
தங்கள் நல்வரவை நாடும்
சி. சின்னத்துரையும்
பிள்ளைகளும்.
48/3 1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[5861]

## பிரபா விசேஷ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாளர் ஊர்ஜிதப்படுத்தவோ மறுதுரைக்கவோ இல்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கைவிட்டால் ஏனைய இயக்கங்களும் அதனைப்பின்பற்றுவார்கள் என்று இலங்கையும் இந்தியாவும் கருதுகின்றன.

நேற்று இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது தமிழக முதல்வர் எம். ஜி. ஆரும் பங்கு பற்றியிருந்தார்.

இம்மூன்று தலைவர்களும நடத்திய பேச்சுவார்த்தைகளில் இலங்கை பிரச்சினைக்கான தீர்வுகுறித்து ஏற்பட்ட முன்னேற்றத்தையடுத்தே தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு திரு. ராஜீவ்காந்தி அழைத்துள்ளார்.

அண்மையில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகப் புதுடில்லி பயணமான தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளின் இனப்பிரச்சினை தீர்வுக்கான மாற்று யோசனைகளை எடுத்துச் சென்றதுடன் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் விடுதலைப்புலிகளை மட்டுமே போராளிகள் சார்பில் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டுமென வலியுறுத்தியதாகப் புதுடில்லி இராஜதந்திர வட்டாரங்கள் முன்பு தெரிவித்திருந்தன. (ஒ-கே)

## பொருள்களை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போராடுவோம்.

இது இவ்வாறிருக்க பெங்களூர்ப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தால் தீவிரவாதிகளுக்கெதிராக இஸ்ரேலின் முழு உதவியுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயத்தமாக இருப்பதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (மா)

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



முருகேசு
சிதம்பரப்பிள்ளை
(ஓய்வுபெற்ற புகையிரதப்
பகுதி ஊழியர்)
தோற்றம் — 24-04-1914
மறைவு — 06-11-1986

அன்புடையீர்!

சென்ற 06-11-86 இல் இறைவனடி சேர்ந்த எமது அன்புத்தந்தை திரு. மு. சிதம்பரப்பிள்ளை அவர்களது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் பலவழிகளிலும் உதவிய நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றி பறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் எதிர்வரும் 20 - 11 - 86 அன்று காலை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி சபிண்டிகரணக்கிரியைகளிலும் கலந்து கொள்ளும் வண்ணம் மிகத் தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்.
370 கோவில்புதுக்குளம்,
வவனியா.

[C-3116]

வெலிங்டன்
திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

இன்று முதல்
லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
ROMANCING
THE STONE
(Action and Thrills)
[Coluor]

## ஜே. ஆர், பிரபா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வார்த்தை நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரில் நடைபெற்ற சார்க் உச்சிமகாநாடு நேற்றுக் காலை முடிவடைந்தபோதும் இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காணுமுகமாக மேலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரதமர் காந்தியும், ஜனாதிபதி ஜயவர்த்தனவும் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதை சற்றுத் தாமதித்திருந்தனர்.

இந்நாள்வரும் இலங்கையின் கிழக்குமாகாணம்சம்பந்தமாக இலங்கை அரசு சமாப்பித்த யோசனைகளையும் ஆராய்ந்துள்ளனர். சிங்களமக்களும், தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் இனவாரியாக வெவ்வேறாக மூன்று மாகாண சபைகளை அமைப்பதற்கு வழிவகுக்கும் வகையில் அரசின் யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நால்வரின் பேச்சுவார்த்தை முடிவுற்றதும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும், பிரதமர் காந்தியும் விமான நிலையத்தில் உள்ள பிரத்தியேக அறையொன்றில் எவரது உதவியுமின்றி சுமார் இரண்டரை மணித்தியாளங்களாகத் தனிமையில் இனப்பிரச்சினை தீர்வுகுறித்து பேச்சுவார்த்தைநடத்தினர்.

இதனைத் தொடர்ந்து இரு வெளிநாட்டுவெளிபுறவு அமைச்சர்களும், சிரேஷ்ட அதிகாரிகளும் இருதலைவர்களது பேச்சுவார்த்தையிற்கலந்துகொண்டனர்.

இதனையடுத்து ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று கொழும்பு திரும்பினார் அவரை பிரதமர் காந்தி வழியனுப்பிவைத்தார்.

இருதரப்பினரிடையும்நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது ஏற்பட்ட உடன்பாடுகள் குறித்து விரைவில் அறிக்கையொன்று வெளியிடப்படுமென அறிவிக்கப்படுகிறது. [வா]

## தள்ளாடி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட இராணுவத்தினர் பவல் கவசவாகனம், ட்ரக், ஜீப் ஆகியவற்றின் மூலம் நேற்று முருங்கன் முகாம் நோக்கி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை முருங்கன் முகாமிலிருந்தும் மூன்னூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நேற்று வாகனங்கள் சகிதம் தள்ளாடி முகாம் நோக்கி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இருப்பினும் இராணுவத்தினரின் இந்த இரண்டு ரோந்துகளின் போதும் எதுவித அசம்பாவிதமும் நடந்ததாக இதுவரை தெரியவில்லை. (ரா)

## இந்திய அரசே

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கந்தசாமி கோவிலடி வீதியில் ஒன்று திரண்டிருந்தனர். பின்னர் இங்கிருந்து பேரணியாக ஊர்வலம் புறப்பட்டு கோவில் வீதியூடாக நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலை அடைந்து நாவலர் வீதியூடாகத் திரும்பி கச்சேரிவீதியைச் சேர்ந்தது.

கச்சேரிவீதி வழியாக யாழ் பிரதான வீதியை அடைந்த ஊர்வலம், யாழ் ஆசனக்கோவில்வீதிச்சந்தியில் நண்பகல் 2 மணியளவில் முடிவடைந்தது.

ஊர்வலத்தினர் இவ்விடத்தில் அமர்ந்து கொண்டதைத்தொடர்ந்து பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் மாதர்களே அதிகளவு அணிதிரண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த ஊர்வலத்தில் கோஷிக்கப்பட்ட கோஷங்கள்:

"இலங்கை அரசு ஆயுதம் குவிக்குது. இந்திய அரசு ஆயுதம் பறிக்குது."

"இந்திய அரசே விடுதலைப் புலிகள் போராளிகள் அன்றி ஏவற்பேய்களல்ல"

"இந்திய அரசே சமரசத் தீர்வை எங்கள்மீது திணிக்காதே."

"டில்லியிற்பேச்சு திப்புவிற்பேச்சு எங்களின் உயிர்கள் பல்லாயிரம் போச்சு."

"தங்கத்தில்வாங்கிய ஆயுதங்களை எங்களிடம் மீளக்கொடு"

"தமிழீழத்தில் பொம்பர் தாக்குதல் தமிழகத்தில் சாம் 7, பறிமுதல்"

"தமிழீழப் போராளிகளுக்குசிறையடைப்பு தாக்குதல் செய்யும் ஜே. ஆருக்கு பாதுகாப்பு". [மா]

# 1-வது பிறந்ததின வாழ்த்து



செல்வி கல்யாணி

திருநெல்வேலி உமா இண்டஸ்ரீஸ் உரிமையாளர் விவேகானந்தராசா திருமதி லலிதா விவேகானந்தராசா தம்பதிகளின் செல்வப்புதல்வி கல்யாணி தனது முதலாவது பிறந்ததினத்தை [இன்று] 18-11-86 இல் தனது பெற்றோருடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா மற்றும் உற்றார், உறவினரும் பல்கலைகளும் கற்று சீர்சிறப்புடன் துர்க்காதேவியின் அருளாசியுடன் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றனர்.

(தேனீர் விருந்துபசாரம் மாலை 4-00க்கு நடைபெறும்)

ச. விவேகானந்தராசா,
7, நிக்கலஸ் லேன்,
சுண்டுக்குளி.

[C 5867]

## 24 படகுகளில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கும்போது, திடீரென கடற்படையைச்சேர்ந்த இரு பீரங்கி பூட்டிய படகுகள் எம்மைச் சுற்றிவளைத்தன கடற்படையினர் தூரத்தில் வருவதை அவதானித்த சில படகுகள் பாளவிநாயகர் கரையை நோக்கி தப்பிச்சென்று விட்டனர்.

"தப்பி ஓடினால் சுட்டுத் தள்ளுவோம்" என ஒலிபெருக்கிமூலம் கடற்படையினர் எச்சரிக்கை செய்துகொண்டு ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனால் நாம் பயத்தினால் தப்பிஓடாமல் நின்றுவிட்டோம்.

கடற்படையினர் எம்மை தமது கப்பலுக்கு அருகாமையில் ஒவ்வொருவராக வரும்படி பணித்தனர். நாம் அங்கு சென்றதும் எமது "திசைகாட்டி" கருவிகளைப் பறிமுதல் செய்துவிட்டு எம்மைக் கடுமையாக எச்சரிக்கைசெய்து அனுப்பினர்.

கடற்படையினர் எம்மிடம் பறிமுதல் செய்த திசைகாட்டி கருவிகளின் மொத்தப் பெறுமதி 1 லட்சம் ரூபாவுக்கும் அதிகமானதாகும். இது போன்ற கருவிகளை இலங்கையில் பெறுவது தற்போது மிகவும் கஷ்டம். இக்கருவிகள் இல்லாமல் நாம் இனிமேல் கடற்றொழிலில் ஈடுபட முடியாமல் இருப்பதாகவும் கூறினர். [வி]

# மூன்றாவது பிறந்ததின வாழ்த்து



செல்வி
அல்போன்சஸ்
சிந்துஜா

மல்லாகத்தைச் சேர்ந்த அல்போன்சஸ், அம்பிகா தம்பதிகளின் அருந்தவப் புதல்வி சிந்துஜா 18 - 11 - 86 ல் தனது மூன்றாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை சவுதி அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, ஐயாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார் சித்தப்பாமார், சித்திமார், அன்ரிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் புனித சவேரியாரின் அருள் பெற்று பல்கலையும் கற்று சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள். (C-5869)

## பிரயாண ஒழுங்குகள்

### (முக்கிய அறிவித்தல்)

நஷனல் கிளீனிங் கொம்பனி - குவைத்

| | | | |
|---|---|---|---|
| 1. | S. முருகதாஸ் | அச்சுவேலி | H 0360186 |
| 2 | P கிருஷ்ணமூர்த்தி | | H 0296768 |
| 2 | SR பிரபாகரன | | H 0443701 |
| 4 | K. செல்வநாயகம் | காங்கேசன்துறை | H 0325412 |
| 5 | K.V செல்வவீரசிங்கம் | | H 0072971 |
| 6 | K தவலிங்கம் | புத்தூர் | H 0285169 |
| 7 | K ராஜரட்ணம் | மல்லாகம் | J 0082142 |
| 8 | P கிருஷ்ணராஜா | புத்தூர் | J 0083661 |
| 9 | K ரவீந்திரன் | சங்கானை | H 0324689 |
| 10. | VE விகிதராஜா | | H 0310570 |
| 11 | CTK பார்த்திபன் | ஊரெழு | H 0349901 |
| 12 | MN மரிகுள் | அச்சுவேலி | H 0422006 |
| 13 | K கிருபாகரன் | யாழ்ப்பணம் | J 00873 2 |
| 14 | K ரஜரட்ணம் | சண்டிலிப்பாய் | G 015 399 |
| 15 | K சிவகுமாரலிங்கம் | கைதடி | J 00·1310 |
| 16. | V சரவணபவன் | பருத்தித்துறை | G 0324992 |
| 17 | S தெய்வேந்திரா | கோண்டாவில | H 0154005 |
| 18 | R உதயமனோகரன் | சுன்னாகம் | H 0305327 |
| 19 | VR லோகநாதன் | | G 0461485 |
| 20 | NS ஆனந்தராஜா | | G 0313457 |
| 21 | P இதயராஜா | சண்டிலிப்பாய் | H 0474058 |
| 22 | SV வசந்தன் | | H 0194244 |
| 23. | NV கந்தசாமி | | H 036 116 |
| 24 | MV சதானந்தன் | | H 0297223 |
| 25 | NSS சந்திரபோஸ் | கோண்டாவில் | H 0098053 |
| 26. | S சூரியகுமார் | | H 0390261 |
| 27 | KP கீதராஜா | | H 0314505 |
| 28. | KN சண்முகநாதன் | | H 0198155 |
| 29 | V பேரின்பதேவன் | அச்சுவேலி | H 0346696 |
| 30. | ST ராஜகுமார் | | H 036 798 |
| 31 | SP சிறீசாந்தருபன் | யாழ்ப்பாணம் | H 0431354 |
| 32 | RK இராசகுமார் | கோண்டாவில் | J 0083487 |
| 33 | P குணவேந்திரன் | திருநெல்வேலி | E 181911 |
| 34 | S ஞானசேகரம் | கோண்டாவில் | H 0306655 |
| 35 | VA சண்முகராஜா | ,, | J 003 141 |
| 36 | BM புஸ்பநாதன் | ,, | H 0272496 |
| 37 | VK குலதேவசிங்கம் | | H 0405754 |
| 38 | JC அமரின் | ஊர்காவற்றுறை | J 0080209 |
| 39. | R. விஜயநாதன் | மீசாலை | F 0 29024 |
| 40. | P விஜயபாஸ்கரதாசன் | | J 0000871 |
| 41. | S சுதாகரன் | யாழ்ப்பாணம் | H 0358066 |
| 42. | CC. பிரான்சிஸ் | | H 0287986 |
| 43. | S. ஏகாம்பரநாதன் | அளவெட்டி | H 0465630 |
| 44. | P விஜயபவன் | சங்கானை | H 0260185 |
| 45 | P. சந்திரதாஸ் | | J 067991 |
| 46. | T. சிவகுமார் | இருபாலை | G 0300480 |
| 47 | VP வாசு | | H 039 415 |
| 48 | S. மகாலிங்கம் | | J 0043323 |
| 49 | S செல்லத்துரை | | H 0350967 |
| 50. | M மகேஸ்வரன் | | H 0320008 |
| 51. | PP உதயகுமார் | | H 025049 |
| 52 | V சுப்பிரமணியம் | | H 0358521 |
| 53 | N சிவராசா | | H 0367324 |
| 54 | PS ராஜா | | H 0221243 |
| 55. | T சந்திரகுமார் | | H 0349045 |
| 56 | NP ஜெயக்குமார் | | H 0316289 |
| 57 | P. கிருஷ்ணராஜா | | J 0083661 |
| 58 | K. ஜெயராம் | | J 0056335 |
| 59 | S. அன்ரன் | | J 0056345 |
| 60 | S. சத்தியசீலன் | | H 0429428 |
| 61 | S. ராஜேஸ்வரன் | | H 0331067 |
| 62 | N. ராசரட்ணம் | | J 0061351 |
| 63. | A சண்முகநாதன் | | H 0280860 |
| 64 | PM நசீர் | | H 0226991 |
| 65. | SS ஜெயச்சந்திரன் | | H 0072903 |
| 66 | PS சுப்பிரமணியம் | | H 0287568 |
| 67. | V பாலசுப்பிரமணியம் | | H 0382045 |
| 68 | S-N. வரதராஜா | | H 0279326 |
| 69 | SK. உதயகுமார் | | H 0042521 |
| 70 | KT கிருஷ்ணராஜா | | H 0305088 |
| 71 | K.M பரமலிங்கம் | | J 0076553 |
| 72 | RS பரமசாமி | | H 0182275 |
| 73 | S மயில்வாகனம் | | G 0284343 |
| 74 | N நற்குணநாதன் | | G 0021590 |
| 75 | N.P. திருச்செல்வம் | | G 0344523 |
| 76. | N. P. யோகராஜா | | H 0205209 |
| 77. | V. K. நாகேந்திரன் | | G 0345268 |
| 78 | T. தெய்வேந்திரம் | | G 0303621 |
| 79 | S இராசகுமார் | | H 0418597 |
| 80 | P. J. ஜெயராசா | | H 0053834 |
| 81. | C. தனபாலன் | | G 0071971 |
| 82 | V I. கனகராசா | | H 0314219 |
| 83. | N முத்துராஜா | | H 0386960 |
| 84. | T. ஆசைராஜா | | H 0205364 |

மேற்குறிப்பிட்ட நபர்கள் உடனடியாக எனது அலுவலகத்திற்கு வந்து உங்கள் ஒப்பந்தங்களை கைச்சாத்திடும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## யூனிவேர்சல் ஏஜென்சி

125 (455) ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக).

A 2877


# 'இதுவரை எமது விடுதலைப் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்கவில்லை' யாழ். பல். மாணவர் அமைப்புக் குழு

யாழ்ப்பாணம்.செவ். "எமக்கு உதவிகள் வழங்கும் இந்திய அரசு இதுவரை எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கவே இல்லை இந்திய அரசு இப்போராட்டத்தை தனது பொருளாதார, இராணுவ நலன் நோக்கில் பயன்படுத்த முயல்கின்றது. இதன் ஊடாக முழு இலங்கையும் தன்னுதிக்கத்திற்கு கொண்டுவரவும், தன் விஸ்தரிப்பு வாதத்தை முன்னெடுக்கவும்முயல்கின்றது இதன் ஊடாக மக்களின் அடிப்படை உரிமையை சிறிலங்கா அரசிற்கு எந்த விதத்திலும் குறைவில்லா விதத்தில நசுக்குகின்றது.

இதன் தொடரே இன்று விடுதலைப் போராளிகளினதும் அதன் தலைவர்களினதும் கைதும் தடுப்புக்காவலும் ஆயுதப் பறிமுதலுமாகும் இச்செயலினை நாம வன்மையாக கண்டிக்கின்றோம்."

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு விடுதலைப் போராளிகளினதும் அதன் தலைவர்களினதும் கைது தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "இந்தியா பலமொழி பேசுகின்ற மக்களைக் கொண்டிருக்கின்ற போதும் அவர்களுடைய சுயநிர்ணய உரிமையையும் ஜனநாயக உரிமைகளையும் இந்திய ஆளும் அரசு ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. இதன் காரணமாக அசாம், பஞ்சாப், மணிப்புரி, சிக்கிம், மிசோராம் மாநில மக்கள் தனிநாடுகோரி போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களது நியாயபூர்வமான போராட்டத்தினை தனது ராணுவத்தினைக் கொண்டு அடக்கி வரும் இந்திய அரசின் போக்கு சிறிலங்கா அரசின் பாசிசத்திற்கு எதுவிதத்திலும் குறைந்ததல்ல.

மக்களின் ஜனநாயகப் போராட்டங்களிற்கு எதிர் நடவடிக்கையில் ஈடுபடுகின்ற இந்தியாவிற்கும் ஏனைய பிற்போக்கு சக்திகளிற்கும் எதிரானபோராட்டங்களிற்கு நாம் பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்குகின்றோம். இப்போராட்டங்கள் மக்கள் போராட்டமாக முன்னெடுக்கபபட்டு அனைத்து சக்திகளையும் ஐக்கியப்படுத்துவதன் ஊடாக எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை அனைத்து பிற்போக்கு சக்திகளிடமிருந்து வென்றெடுப்போம் (சி)

## இன்றைய பலன்

திகதி:— 2 (18-11-86)
மாதம்:— கார்த்திகை
கிழமை;- செவ்வாய்
நக்ஷத்திரம்:- ரோகினி
பி-ப வரை
திதி:-துதியை மு. இ வரை

மேடம்: உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும். கருத்து வேற்றுமைகள் ஏற்படும் திறமைக்கு பங்கம் விளையும்.

இடபம்:- ஆயுத பீடைக்கு இடமுண்டு. எதிலும் அதிக விழிப்புடன் செயல்படவும். நண்பர்களும் காலை வாரி விடக்கூடும்,

மிதுனம்:- மனதில் புதிய எண்ணங்கள் அலைமோதும். காதல் விவகாரங்களும் தலை தூக்கும். சிலருக்கு மணவாழ்விற்கு வித்திடப்படும்,

கடகம்:- செய் தொழிலில் தற்ற நிலைமை தென்படும். மிகையான போக்கினால் மனதும் புண்படும். சகோதரவழியல் மன சஞ்சலமும் ஏற்படும்

சிங்கம்:- இலாபகரமான தொழிலில் ஈடு படுவீர்கள். வாகன சுகமுமுண்டு. வரவிலும் திருப்தியுண்டு, குடும்ப நலமுமுண்டு.

கன்னி;- புத்திரவழியாலும் புகழ் குவியும். தொழில் விருத்தியுண்டு. குடும்பத்திலும் சுமுகமான நிலை தென்படும்.

துலாம்:- கழுகுப் பார்வை வட்டமிடும். முன்னேற்றத் தடையுமுண்டு. பிணிக்கு இடங்கொடாது நடக்கவும்.

விருச்சிகம்:- மனநிறைவு தென்படும். மனதிலும் விரக்தி முடிவுபெறும். தன் தொழில் விருத்தியுமுண்டாம்.

தனுசு:- நாளெல்லாம் அலைசசல்; உடல் மெலிவு தோன்றும். குறுக்கு வழியில் இறங்க வேண்டாம். நிதானம் அவசியம்.

மகரம்:- போது மென்ற மனத்துடன் செயல் படுவீர்கள். புதிய உற்சாகம் பிறக்கும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

கும்பம்:- தொழில் லாபமுண்டு தொல்லைகள் நிவிர்த்தியுண்டு. அந்நியவாசம் ஏற்படும். புதுமனைகட்டுவதிலும் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

மீனம்:- கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றம் காணுவீர்கள். பல வழிகளிலும் தனவரவிற்கு இடமுண்டு. பணபலமுமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்


## பதவி வெற்றிடம்

பல வேலைத்திட்டங்கள் மூலம் சுமார் 100 பெண்களுக்கு வேலை வழங்கியுள்ள எமது நிறுவனத்தின் புதிய திட்டங்களுக்கு கீழ் குறிப்பிட்ட பதவிகளுக்கான படித்த இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் ரூபா 1,000.00 முதல் ரூபா 1500.00 வரை வழங்கப்படும்.

1. சந்தைப்படுத்தும் பெண்கள்
2. கைப்பணிப் பொருட்கள் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள்
3. சவர்க்காரம் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள்
4. கோழிப்பண்ணை மேற்பார்வையாளர்கள்
5. தையல் துறையில் 2 வருட அனுபவம் உள்ளவர்கள் (தையல் இயந்திரம் உள்ளவர்கட்கு முன்னுரிமை)
6. கூலியாட்கள்
7. பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் (3வருட அனுபவம் உள்ளவர்கள்)

சந்தைப்படுத்தும் பெண்கள் பகுதிக்கு விண்ணப்பிப்போர் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு நேரில் வரவும். ஏனைய பகுதிகளுக்கு தபால் மூலம் விண்ணப்பிக்கவும் வெளியூர் பிள்ளைகளுக்கு தங்குமிடவசதி அளிக்கப்படும்.

நன்றி.

றொப்லர் இன்ரநஷனல்
95, பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம்.

(A 2878



யாழ்நகரில் ஓர் புதிய உதயம்
எத்தனை கோடி பணமிருந்தாலும்
நிம்மதிவேண்டும்----

## அமைதியிழந்து தவிக்கின்றீர்களா?

★ குடும்பச்சிக்கல்கள்
★ இளைஞர் பிரச்னைகள்
★ தற்கொலை நாட்டம்
★ பாலியற் பிரச்னைகள்
★ மது அடிமை நிலை
★ புகைத்தல் பழக்கம்
★ போதைவஸ்து அடிமைநிலை

இவற்றிலிருந்து மீட்சிபெற அறிவுபூர்வமான, ஆலோசனைகள் பரிவுடனும் அந்தரங்கமாயும் வழங்கப்படுகின்றன.

ஆலோசனையாளர் குழு:
★ டாக்டர் க. சுகுமார் M.B.B.S. [Cey]
★ அருட்திரு: எஸ், டேமியன் M.A (Hon) Coun. Psy. (Ottawa)
★ அருட்திரு: எஸ். ஜோ கதிர்காமர் Dip. in Coun. Psy (Vellore)
★ டாக்டர் செல்வி மாலதி சிதம்பரநாதன் M.B.B.S. [Cey]

ஆலோசனை நேரம்:
ஞாயிறு மாலை — 2.30 - 5.30
வியாழன் மாலை — 2 30 - 5.30
மற்றைய நாட்களில் பதிவு செய்தல் மட்டும் 8 30 முதல் 5.30 வரை

## உளவள ஆலோசனை நிலையம்

19/3, கொழும்புத்துறை வீதி.
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
[வெள்ளி விடுமுறை தினம்]

A Creation of Joe Egerton's Zenith Ads [A3111]



உதைபந்தாட்டப் போட்டியில்:

# சென். அன்ரனிஸ் வைக்கிங்ஸ் சாம்பியன்களாகத் தெரிவு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ் உதைபந்தாட்ட லீக் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திய '9-வீரர்' பங்குபற்றும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியில் 'ஏ' பிரிவில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும், 'பி' பிரிவில் 'வைக்கிங்ஸ்' கழகமும் சாம்பியன் கிண்ணங்களைத் தட்டிக் கொண்டன.

'ஏ' பிரிவின் இறுதி ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் கழகமும் - கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இப்போட்டியில் இரு கோஷ்டிகளும் சிறப்பாக விளையாடி ஆட்டமுடிவில் தலா இரு கோல்களைப் பெற்றமையால் 'பெனல்டி பிறேக்' மூலம் வெற்றி-தோல்வி நிர்ணயிக்கப்பட்டது இக்கட்டத்தில் பாஷையூர் சென் அன்ரனிஸ் கழகம் வெற்றி பெற்று சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

'பி' பிரிவின் இறுதி ஆட்டத்தில் 'வைக்கிங்ஸ்' கழகமும் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் கழகமும் மோதின இப்போட்டியின் இறுதியிலும் இரு கோஷ்டிகளும் தலா இரு கோல்களைப் போட்டமையால் 'பெனல்டிபிறேக்' மூலமே வெற்றி-தோல்வி நிர்ணயிக்கப்பட்டது. இக்கட்டத்தில் 'வைக்கிங்ஸ்' கழகம் சிறப்பாக விளையாடி வெற்றிபெற்றது.

இப்போட்டிகள் அனைத்தும் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (வி)

## பளை மகாவித்தியாலயம் சிறந்த பெறுபேறு

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் பளை மகாவித்தியாலயம் அண்மையில் வெளியான ஜீ.சீ.ஈ உயர்தர பரீட்சை முடிவின் போது அதிக தொகை மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என்று வட்டாரக்கல்வி அதிகாரி எஸ் தணிகாசலம் பிள்ளை தெரிவித்தார்.

இப்பாடசாலையில் தோற்றிய 29 மாணவர்களில் 19 பேர் பல்கலைக்கழகம் செல்லக் கூடிய அளவு சித்தி எய்தியுள்ளதாக பளைப்பகுதி கொத்தணி அதிபர் ஏ. பி. செல்லையா பாடசாலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கூறினார்.

தற்போதைய பெறுபேறின் படி கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து முதல்த்தடவையாக மாணவர் ஒருவர் டாக்டராகும் வாய்ப்பு கிட்டியுள்ளதாகவும் கொத்தணி அதிபர் ஏ. பி. செல்லையா குறிப்பிட்டார்.


பஜனுவளி வெளியீட்டு விழா

அமரர் விஸ்வப்பா

இரண்டாம் ஆண்டு நினைவுதினம்

இடம்:- நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனம்.
காலம்:- 22-11-86 சனி காலை 10-00மணி.

அனைவரும் வருகைதந்து ரூபா 23/- பெறுமதியான இந்நூலை ரூபா 10/-க்கு விழாவில் வாங்கி பயனடைய வேண்டுகின்றோம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

திரு. திருமதி சே. சிவசிதம்பரம்
குடும்பத்தினர்
(அமரரின் மருமகன்)

39, கல்லூரி லேன்,
யாழ்ப்பாணம்.

(C-5850)



எமது நேற்றைய வெளியீடு

ஆனந்தபாபு, பானுச்சந்தர், ஜீவிதா
"நண்பன்" (Pyramid Master)

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665.

[A-2886]



87 A/L Day Class

APPLIED — எளிமை இசை இயக்கம்
PURE — சிக்கல் எண்கள்
திங்கள், வெள்ளி [காலை 7-00 — 9-00]

88 A/L

PURE — நுண்கணிதம்
APPLIED — காவிஸ்
வியாழன், வெள்ளி 4-00 — 6-00

ஆரம்பம்:- 20-11-86
ஆசிரியர்:- A. பத்மநாதன்

NIRU TUITION CENTRE
KONDAVIL.

[A-2885]


# தமிழில் வைத்திய....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களை இதனைச் செயல்முறையிற் சாதித்துக் காட்டியிருக்கின்றார் அவர் மருத்துவத் துறையிலே பல நூல்களைத் தாமே தமிழில் எழுதி வெளியிட்டும், சிலஆங்கில மருத்துவ நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தும் வெளியிட்டும் இருக்கின்றார். பலர் சேர்ந்தோ நிறுவன ரீதியாகவோ அரசாங்கமோ செய்ய முடியாதவற்றைத் தனிமனிதனாகத்தான் செய்து முடித்ததன் மூலம் ஈழத்துத் தமிழரின் தமிழ்க் கல்விப் போதனைத்துறையில் அவர் தந்த படைப்புக்கள் தனியொருவரின் சாதனைக்குச் சிறப்பான எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன, இந்தத் துறையிலே அவர் செய்த பணிகள் பிறிறொருவர் செயற்படுத்த முடியாதவையாக அமைகின்றனவென்பது குறிப்பாகச் சுட்டப்பட வேண்டியது.

தாய் மொழி மூலம் எல்லாத்துறைகளிலும் பல்கலைக்கழகப் படிப்பு இறுதியாண்டு வரை தாய்மொழி மூலம் புகட்ட வேண்டுமென்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. தாய் மொழி மூலம் கல்வி கற்றவர் பல்கலைக்கழகத்திற்கு வரும்போது தமிழ் மொழி மூலம் கல்வி புகட்டப்பட வேண்டுமென்ற கொள்கையை ஆதரித்ததோடு அதனைச் செயற்திட்டம் மூலம் வழி நடத்த முயன்றவர் பேராசிரியர் வைத்தியகலாநிதி சின்னத்தம்பி. ஆனால் அவர் தமிழிலே இயற்றிய மருத்துவ நூல்களும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்த நூல்களும் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற காலத்திற்குப் பின்னரே வெளி வந்ததையாகும்.

இவற்றில் முதலாக வெளி வந்தது 'மகப்பேற்று மருத்துவம்' என்னும் நூலாகும் இது 1969ஆம் ஆண்டில் வெளியானது. "மகிழ்ச்சியுடனும் அன்புடனும் கல்வி புகட்டிய எண்ணற்ற மாணவர் கூட்டத்தினருக்குப் பெருமையுடன் அரும்பெரும் பணியாக இந்நூலை உரித்தாக்குகின்றேன்" என நூலின் நுழைவாயிலில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் மகப்பேற்று நலம் பேணிகள், பல்கலைக்கழகப் பட்டதாரிகள், மாணவர்கள், இளம்மருத்துவர் ஆகியோர் மகப்பேற்றுக் கலையை இலகுவில் அறிந்து கற்பதற்கு மிகவும் பயனுடையதாக அமைந்தது. இலங்கையிற் காணப்படும் மருத்துவ நிலையை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட இந்நூலில், இக்கலையை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பயின்றும், மாணவர்களுக்குக் கற்பித்தும்பெற்ற அனுபவ அறிவைக் காணக் கூடியதாகவிருக்கின்றது. மிகத் தெளிவான முறையில் யாவருக்கும் விளங்கக்கூடிய வகையிற் பிள்ளைப்பேறு வைத்தியம் பற்றி விரிவான ஓர் அரிய நூலைத்தந்திருக்கின்றார். 456ம் பக்கத்திலிருந்து 462ம் பக்கம் வரை கலைச்சொற்றொகுதி என்ற பகுதியிலே தமிழ்க் கலைச்சொற்களுக்குரிய ஆங்கில சொற்கள் தரப்பட்டுள்ளன நலம்பேணல் விஞ்ஞானம் (Text Book of Nursing) என்ற நூல் 1972ல் ஊற்றுப் பிரசுர மருத்துவ வெளியீடாக அச்சில் வந்தது.

ஊற்றுப் பிரசுர மருத்துவ வெளியீடு இரண்டாவதாக 1974ம் ஆண்டில் பிரயோக உடற்றொழிலியற் சொற்றொகுதி (தமிழ்-ஆங்கிலம்) Glossary Technical Terms in Applied Physilogy (Tamil-English) அச்சிடப்பட்டது 180 பக்கங்களைக் கொண்ட இக்கலைச் சொற்றொகுதி மிகவும் பயனுள்ளதொன்றாகும். இதே ஆண்டிலே சாம்சன் றைற் எனும் மேனாட்டு வைத்தியரின் பிரயோக உடற்றொழிலியல் (Applied Physiology) என்ற நூலின் 12ம் பதிப்புப் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களாலே தமிழாக்கம் செய்யப்பட்டன. இப் பன்னிரண்டாம் பதிப்பு 1971ம் ஆண்டில் ஆங்கிலத்தில் இலண்டன் மிடில் செகஸ் பிணிதீர் பணிமருத்துவக் கல்லூரியினால் வெளியிடப்பட்டது. து உயர் படிப்பு மாணவர்களுக்கும், மருத்துவர்களுக்குமான ஓர் நூலாகும். இது ஓர் அனைத்துலகத் தரம் பெற்ற நூலானமையினாலேயே நாம் இதலிருந்து மாணவருக்குப் பயன்படும் முறையில் எளிதாக்கம் செய்ய முடியுமென்றும், மக்களுக்குப் பயன்படும் முறையில் எளிய நூல்களையெழுத உதவுமென்றும் தாங்களும் மாணவரும் இந்நூலை ஒரு சிறந்த மேற்கோள் நூலாகப் பயன்படுத்தலாமென்றும் விரிவுரையாளர் பலர் கூறினர். இவற்றின் விளைவாகப் பேராசிரியரின் தமிழாக்கம் 1974ம் ஆண்டு மாசி மாதம் வெளிவந்தது.

பேராசிரியர் இளைப்பாறி யாழ்ப்பாணத்தல் வந்து வாழுங்காலத்தில் 3 நூல்களை வெளியிட்டார். அதில் ஒன்றாகிய 'இளம் பெண்ணோயியல்' 1982ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன் முகவுரையில் அவர் பின்வருமாறு கூறுகின்றார் 'பெண்ணோயியல் என்ற சொற்றொடர் பல கருத்துக்களை அடக்கியுள்ளது. இவற்றுள் ஒரு பெண்ணை வருத்தும் பொது நோய்கள், அவற்றின் தடுப்பு முறைகள், இரசாயன மருந்து முறைகள், அகச் சுரப்பியின் சுரப்பு மருந்து முறைகள், அறுவை விளைவுகள் முதலியன அடங்கும். ஆகவே பெண்ணோய் அறிவியலை இரு பாகங்களாக எழுதி வெளியிடவுள்ளேன்' அதன் முதலாம் பகுதியாகவே 'இளம் பெண்ணோயியல்' வெளிவந்தது.

பெண்ணோயியல் இரண்டாம் பகுதியாக 'மூப்புற்றோர் பெண்ணோயியல்' என்னும் நூல் 1984ல் பேராசிரியரால் வெளியிடப்பட்டது. இந்நூலிற் சிறப்பாக வயது முப்படைந்த பெண்களைப் பாதிக்கும் நோய்களைப் பற்றியும், அவற்றிற்குரிய தீர்வுகளைப் பற்றியும் விபரித்துள்ளார். கருப்பையடல் முதலிய பகுதிகளைப் பெண்ணிற்கு உயிர்க்கெடுதியை உண்டாக்கும் கான்சர் நோய்கள் பற்றியும் அவற்றின் தீர்வுகள் பற்றியும் விபரிக்கப்படவில்லை. ஏனெனில் திடமான தீர்வும் அதன் முடிவும் செவ்விதமாக அறியப்படவில்லை.

கான்சர் நோயினைக் குணப்படுத்துவதற்கு அறுவை வினைத் தீர்வினால் பல உயிர்க்கெடுதிகளும் வேறு உடல் நலக் குறைகளும் விளைவதனால் இத்தீர்விலும் றேடியத் தீர்வு சிறப்பெனக் கண்டறிந்தார். அவரைப் பொறுத்தவரையில் அவர் அறுவை வினைத் தீர்வில் திறம்பட ஈடுபட்டிருந்தாலும் பின்னர் றேடியத் தீர்வில் நல்ல தீர்வு முடிபுகளைக் கண்ணாரக் கண்டு அறிந்தபடியால் இவ்வகைத் தீர்வு முறையே சிறந்ததென அவர் கருதினார். நோயைப் பற்றிய செவ்விய வாக்கியங்களுடன் தம்மாலே தரப்படும் முறையில் வினவி நிலைமையை அறிவது நன்றெனறு அவ்விவரங்களைத் தந்துள்ளார். இந்நூலை அவரே பதிப்பித்து வெளியிட்டுள்ளார் 'நச்சுப் பாம்புகளும் அவற்றின் கடிகளும் தீர்வும் Poisonous snake bites and Heir treatement) என்னும் நூல் 1983ம் ஆண்டு நவம்பர் மாதம் இவரால் எழுதப்பட்டு காங்கேசன் துறை மருத்துவ வெளியீட்டினரால் வெளியிடப்பட்டது. இந்நூலின் அட்டையில் 'அறுவை நலம் பேணற் கைநூல் Nursing in Operating TheAtre) ஈஸ்வரி வைத்தியசாலையினரால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலையும் பேராசிரியர் சின்னத்தம்பி எழுதினாரோவென்பது இந் நூலைப் பார்த்தாற்றான் அறிய முடியும்

இவர் இயற்றிய இன்னொரு நூல் "The Diary of the Tamil University Movement" என ஆங்கிலத்தில் ஆகஸ்ட் 1981இல் எழுதிய நூலாகும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்பற்றிய குறிப்புக்களைச் சேகரித்து வைத்துக் காலவரைப்படி எழுதப்பட்ட இந்நூல் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் தமிழருக்கென ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதற்கு எடுத்த முயற்சிகளை உள்ளடக்கியுள்ளதாக விளங்குகின்றது 'அமரர் பேராசிரியர்' பேரம்பலம் கனகசபாபதி அவர்களுக்கு அன்புப் படையல் என ஒரு நூலையும் 23-2-77இல் வெளியிட்டிருக்கின்றார்

தமிழ் நாட்டிலே தஞ்சாவூரில் நிறுவப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழில் விஞ்ஞான பருத்துவ நூல்களை வெளியிட்டிருக்கின்றது இப்பணியைத் தொடங்கும்போது அப்பல்கலைக்கழகத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்த பேராசிரியர் ஒருவர் கலைச் சொல்லாக்கம் பற்றிப் பேராசிரியரிடம் விளக்கம் பெறவிரும்பினார். அப்போது நான் அவரிடம் அழைத்துச் சென்ற போது, தனி மனிதன் ஒருவன் பாரிய அளவில் மருத்துவத்துறையிலே நூல்களை எழுதியதையும், மொழியாக்கத்தையும் கலைச் சொல்லாக்கத் தொகுதி வெளியிட்டதையும் நேரிற் பார்த்து வியந்து பாராட்டினார்.

[மிகுதி நாளை தொடரும்]

## மின்சாரவசதி

சாவகச்சேரி, திங்கள்

1986ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்டவரவு செலவுத் திட்டத்தின் கீழ் கைதடி நவபுரம் கிராமத்துக்கு மின்சார வசதிகள் கிடைக்கவுள்ளன.


A/L 87 DAY CLASS பகுதி - II (மாலை)

ஒவ்வொரு பாடங்களிலும் பகுதிபகுதியாக மீட்டலுடன் வினு/விடை வகுப்பு நடைபெறவுள்ளது

1-11-86 புதன் 1-00 மணிக்கு வகுப்பு ஆரம்பமாகின்றது. கிழமை நாட்களில் 5-00மணிவரை வகுப்புக்கள் நடைபெறும். பரீட்சை எடுத்து புள்ளிகள் குறைந்த மாணவர்கட்கு உகந்த வகுப்பு.

Physics — Mr. மணியம், விக்கி
Chemistry — Mr மோகன், சிவசோதி
Maths — Mr. சுந்தரகுமார்
Zoology — Mr. இளங்கோவன்
Botany — Mr பாலா

DAY CLASS பிரிவு I இல்
Electricity — Mr மணியம்
Inorganic — Mr. மோகன்

DAY CLASS பிரிவு II இல்
Heat — Mr. மணியம்
Sound — Mr. விக்கி
Physical — Mr. மோகன்
Organic — Mr. மணியம்

விபரங்கட்கு:-
NEW SCIENCE ACADEMY,
JAFFNA.

[A-2883]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 18-11-86

# "விஜிதரனை விரைவில் கண்டுபிடித்து பெற்றோரிடம் ஒப்படைக்கவும்"

## பேராசிரியர் சு. வித்தியானந்தன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்

"விஜிதரன் காணாமல்போய் இரு வாரங்கள் ஆகிவிட்டன. அவரைப்பற்றி தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. அவரை விரைவில் கண்டுபிடித்து அவரின் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு மனிதாபிமானமுறையில் யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்"

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது;

விஜியின் தாயார் புவனேஸ்வரி மட்டக்களப்பில் நிலவும் சூழ்நிலையையும் பொருட்படுத்தாது தன் பெண்பிள்ளைகளை தனியே விட்டுவிட்டு இங்கே வந்து சேர்ந்து மகனைக் கண்டுபிடிக்க முயற்சித்து வருகிறார். விஜியின் தகப்பனாரும் அவருமபல இடங்களுக்குச்சென்று தேடிப்பார்த்தும் பயனளிக்கவில்லை.

விஜியின் தாயார் என்னிடம் வந்து கண்ணீர்மல்கிய நிலையில், மகனின் பாதுகாப்புக் கருதியே அவரை மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் அனுப்பி விடுமுறைக்குக்கூட அங்கு வர வேண்டாமென்று பணித்திருந்ததாகவும் விஜி விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு இராணுவத்தினர் நடவடிக்கையால் உயிரை இழந்திருந்தால் தான் கவலைப்பட்டிருக்க மாட்டேனென்றும் முறையிட்டுள்ளார்.

மாணவர்கள் உண்ணாவிரதம் நடத்திக்கொண்டு போகிறார்கள். இதனால் விரிவுரைகள் நடைபெறாது. 1986 - 87 ஆண்டுக்குரிய தேர்வுகள் பிற்போட வேண்டி நேரிடுகிறது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் பேசும் மாணவர்களே. பொது மக்களும் மாணவன் காணாமற்போனதுபற்றிப் பெரும கவலையுடன் இருக்கின்றனர். (மா)

## அரிசிக் கப்பல் யாழ் வந்தது

சுண்டுக்குளி திங்

கொழும்புத் துறைமுகத்திலிருந்து 950 தொன் எடையுள்ள அரிசியுடன் 'றுகுனு' என்னும் கப்பலொன்று நேற்று முன்தினம் காங்கேசன் துறை முகத்தை வந்தடைந்துள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னையா இராசமணி

திருமதி சின்னையா இராசமணி காலமாகிவிட்டார். இவர் பென்சனர் சின்னையாவின் அன்பு மனைவியும், கந்தப்பு - தங்கமுத்துவின் மூத்தபுதல்வியும், Dr. குலசிங்கம் [அமெரிக்கா]வின் அன்புத் தாயும், Dr. சுமதி குலசிங்கத்தின் (அமெரிக்கா) அன்பு மாமியும், திலகவதி, இலட்சுமி பாக்கியம், அசுபவதி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் சகோதரியும், சுகன்னியா, சத்தியஜிந்தின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 18-11-86 [இன்று] செவ்வாய்க்கிழமை 2-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்: வ. சின்னையா.

நீர்வேலி தெற்கு, நீர்வேலி. [C-5866]

### சரவணமுத்து நடராஜா

திருநெல்வேலி வடக்கு, சரவணமுத்து நடராசா காலமானார்கள் இவர் காலஞ்சென்ற சரவணமுத்து சின்னப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும், நல்லம்மா பூமணி ஆகியோரின் அன்புச்சகோதரனும், பூரணத்தின் அன்புக்கணவரும், பூனிமலைநாதன் [அமெரிக்கா] ஆனந்தக்குமார் [கனடா], ஜமுனாதேவி, றங்கா, [கனடா], சிவசக்தி [கனடா], ஆகியோரின் அன்புத் தந்தையும், பூபாலசிங்கம் [கனடா], விண்டா [அமெரிக்கா] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜேசன் [அமெரிக்கா], ரஜீவ் (கனடா), ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று[18-11-86] செவ்வாய்க்கிழமை நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு பிற்பகல் 3 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

(C 5870)

### மேபிள் மொனிக்கா



மேபிள் மொனிக்கா அவர்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற போல் அன்றா [இளைப்பாறிய இலிகிதா, கல்வித்திணைக்களம்], நேசம்மா ஆகியோரின் அன்பு மகளும், ஊர்சிலா அன்ரனிதாசன், எலிசபேத் [ஜேர்மனி], அருள்பிரகாசர் [சவுதி அரேபியா], வரப்பிரகாசர் (சுவிற்சர்லாந்து), செல்வப்பிரகாசர், ஞானப்பிரகாசர் [ஜேர்மனி], ஜெயப்பிரகாசர் [ஜேர்மனி], அக்னஸ் கிளேய, ஜோண் அன்ரனைஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்ரனிதாசன் அவர்களின் அன்பு மச்சாளும், சாள்ஸ் கொலின், காலஞ்சென்ற மேரி ஜெயந்திமாலா, பிலோமினா சாந்தி, ஆகியோரின் அன்புச் சிறிய தாயாருமாவார். அன்னாரின் பூதவுடல் 19-11-86 புதன்கிழமை மாலை 4-00மணியளவில் யாழ். பரிசுத்த கொஞ்செஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நேசம்மா அன்றா.

இல: 50 (126) தேவாலய வீதி,
யாழ்ப்பாணம். (C-5860)

## OBITUARY

### MR. D. P. SUNDARAMPILLAI - Expired.

Beloved husband of Elizabeth, loving father of Kamala Samuel (Canada), Padman (Manager, The village. Habarana) Vimala Dharmaindran, Shanthi (U. K), Rudra (Accountant, Poltech Ceylon Ltd., Colombo), Malini Jayasundrakumar, father-in law of Bala Samuel (Canada), Josephine, Dr Dharmaindran (U K) Yoges (Y W C A: Colombo) and Jayasundrakumar (Assistant Superintendent State Plantation. Kalebokke). Funeral arrangements will be notified later.

29, Eachchamoddai Road,
Chundikuli,
Jaffna.

(C 5857)

## கிளிநொச்சியில்— புலிகளின் தாக்குதலால் ராணுவம் முகாம் திரும்பியது

யாழ்ப்பாணம், செவ்

கிளிநொச்சி முகாமிலிருந்து நேற்று வெளியேறிய இராணுவத்தினர் கந்தசாமி கோவில் வரைவந்தனர். விடுதலைப்புலிகள் அவர்களை எதிர்கொண்டு தாக்கவே அதற்குஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் மீண்டும் முகாமுக்கே திரும்பினர்.

முகாம்சென்ற இராணுவத்தினர் அங்கிருந்து மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தினர். புலிகளும் அதனை எதிர்த்து முகாம நோக்கி மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தினர். சேதவிபரங்கள்பற்றிஇதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை (ரா)

## "நீதிக்காக அனைவரும் போராடவேண்டும்"

### சட்டத்தரணி பாலசுப்பிரமணியம்

நல்லூர்: திங்கள்

"யாராக இருந்தாலும் அநீதியைக் கண்டித்து நீதிக்காக போராட வேண்டும். அந்தவகையில் மாணவர்கள் சரியான ஆயுதத்தைக் கொண்டு சரியான வழியில் போராட இறங்கியிருப்பது பல்கலைக்கழகத்திற்கு மட்டுமல்ல நாட்டுக்குமே ஒருவிடிவு காலத்தை ஏற்படுத்தும்" இவ்வாறு யாழ். பல்கலைக் கழகத்தில் அ. விஜிதரன் கடத்தப்பட்டதை ஆட்சேபித்து நடைபெறும் உண்ணாவிரதத்தின் மூன்றும் கட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் யாழ். பிரஜைகள் குழுத்தலைவர் சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

இன்று இரண்டாம் கட்டமாக உண்ணாவிரதம் இருந்த மாணவர்கள் தமது உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்ள வேறு 30 பேர் 3-ம் கட்ட உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். இன்றைய அடையாள உண்ணாவிரதத்தில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைம்பீட, சித்தமருத்துவ போதனாபீட, மருத்துவபீட மாணவர்களும் பொதுமக்களும் பெருந்தொகையில் கலந்து கொண்டனர்.

இன்று மாலை அடையாள உண்ணாவிரதத்தை முடித்து வைத்தும் ராதனைப் பல்கலைக் கழகபொறியியல் போதனாபீட மாணவன் திரு. தாமரைச் செல்வன் பேசுகையில் எந்த ஒருமனிதனினதும் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும்போது முன்நின்று போராடுபவர்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர்களாவார்கள். அந்த வகையில்எம்மத்தியிலுள்ள அராஜகங்களை எதிர்த்து அடிப்படை உரிமைக்காகப் நடைபெறும் இப்போராட்டத்தை நெறிப்படுத்தும் முதல்படியாக இவ் உண்ணாவிரதம் அமையும் என்பதில் ஐயமில்லை" என்றார். [ண]

## "யாழ். ஆஸ்பத்திரிதொடர்ந்து வழமைபோல் நடைபெறும்"

### வைத்திய நிபுணர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்; செவ்

யாழ். ஆஸ்பத்திரி வழமைப் போல் இயங்கும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரி வெறிச்சோடிக்கிடக்கின்றது என்று நேற்றைய பத்திரிகை செய்திகள் மூலம் நோயாளர்கள் அவ்வளவாக சமூகம்தரவில்லை; இதுகுறித்து வைத்திய வட்டாரம் தமதுஆழ்ந்தகவலையை தெரிவித்துள்ளது.

யாழ் நகரில் அசம்பாவிதங்கள் நடந்தால் மாத்திரமே சிலதடைகள் ஏற்படலாம் என்றும் அப்படி அல்லாதபட்சத்தில் கிளினிக்குகள் யாவும் வழமை போல் ஒழுங்காக நடைபெறுமென்றும் நோயாளர்கள் தவறாது வந்துதமது சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ரா)

## பாலம் திருத்தப்பட்டது

யாழ்ப்பாணம், திங்

இராணுவத்தினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட வல்லைப்பாலத்தை ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணிப் போராளிகள்மக்களின் உதவியுடன் நல்லதிருத்தம்செய்து முழுமைப்படுத்தியுள்ளனர்.

வடமராட்சியை துண்டாடி மக்களுக்கும் போராளிகளுக்கும் தொல்லை கொடுக்கு முகமாக சிறிலங்கா இராணுவத்தினர் யாழ்-பருத்தித்துறை வீதியிலுள்ள வல்லைப் பாலத்தைகுண்டுவைத்துதகர்த்தது தெரிந்ததே. [மா]

## ஈழம்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னால் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி ஜயவர்த்தன தயாரித்துள்ள சமாதான யோசனைகளின் அடிப்படையில் தமிழர்கள் பாதுகாப்பாகவும் சமாதானமாகவும் வாழ வழிவகுக்கப்படும் என்ற நம்பிக்கையை அமைகாநட்டில் பிரதமர் ராஜீவ் தெரிவித்தார்.

இத்தகைய உடன்பாடு ஒன்று ஏற்பட்ட பின் அதுசரியாக அமுல்நடத்தப்படுமா என்பதை இந்தியா உறுதிப்படுத்துமா? என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்ட ராஜீவ் காந்தி நாம் தமிழர்களுக்கான ஒருதனிநாடு அமைக்கப்படுவதை எதிர்க்கிறோம் என்றார்.

பயங்கரவாதத்தை வன்மையாகக் கண்டித்துவரும் நீங்கள் எதற்காக இலங்கை அரசுக்கு எதிராக ஈழம் கோரிவரும் தமிழ்ப் போராளிகள் இங்கு முகாம்களை அமைக்க அனுமதித்துள்ளீர்கள்? என்ற வெளிநாட்டு நிருபரொருவரின் கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் ராஜீவ்—

இங்கு முகாம்களில் தங்கியிருப்பவர்கள் இலங்கைத் தமிழ் அகதிகளே. இவற்றைத் தவிர தமிழ் ஈழப் போராளிகள் பயிற்சி முகாம் எதுவும் இல்லை என்று வற்புறுத்திக் கூறினார்.

தமிழ்ப் போராளிகளின் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று ஒருபோதும் கூற முடியாது. இனப் பிரச்னைக்கான பாரிய விளைவுகளுக்கு அரசபடைகளே காரணம் என்பதை ஜனாதிபதி ஜெயவர்த்தனவே ஒப்புக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடனும் பல்வேறு நிலைகளில் இரு தரப்பினருடனும் திரு. ராஜீவ் நடத்திய பேச்சுவார்த்தை எந்தளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது என்ற கேள்விக்கு, பேச்சுக்கள் முன்னேறி வருவதாகவும், தற்போதைய நிலையில் எதவும் அதுபற்றித் தாம் கூறமுடியாது என்றும் தெரிவித்தார். [சி-வா]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O; Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126